ஆஸ்திரேலியா

# எதிரொலி

ETHIROLI

குரல் 04 அதிர்வு 41 நவம்பர் 2020 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162









# ஊசி வழி பார்த்து காத்திருக்கும் ஆஸி.!




ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza
Shopping Centre, 49-55 McCrae Street,
Dandenong VIC 3175




03 7379 7777 www.srimurugantrading.com.au @SriMuruganAustralia

POINT COOK | CARRUM DOWNS | NARRE WARREN

INDIA | SINGAPORE | MALAYSIA | INDONESIA | AUSTRALIA | DUBAI | FRANCE

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
நவம்பர் 2020



# ஆஸ்திரேலிய படையினரின் ஆப்கான் அட்டகாசங்கள்! பிரம்போடு வருகிறார் பிரதமர்

ஆஸ்திரேலியாவின் ஒரு சில ஊடகங்களில் மட்டுமே வெளியாகி புகைந்துகொண்டிருந்த "ஆஸ்திரேலிய படையினரின் ஆப்கான் போர்க்குற்றங்கள்"சீரியஸான நிலையை அடைந்திருக்கிறது. உள்மட்ட விசாரணைகளின் பெறுபேறுகளை வைத்துப்பார்க்கும்போது, எளிதில் மூடி மறைத்துவிட முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்ட விவகாரத்தை எப்படி கையாளுவது என்பதில் பிரதமர் மொறிஸனே முடிவெடுப்பதற்கு தயாராகிவிட்டார்.

இந்த விடயம் ஆரம்பத்தில் சூடு பிடித்த மாத்திரத்திலேயே அதை அணைத்துவிடுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் "பெயார் பொக்ஸ் மீடியா" ஊடக நிறுவனம் அதனை விட்டுவிடவில்லை. அந்த ஊடகத்தின் புலனாய்வு செய்தியாளர் கங்கணம் கட்டிக்கொண்டு அடுத்தடுத்து பல விவகாரங்களை அம்பலத்துக்கு கொண்டுவந்ததை அடுத்து, விடயம் அரசியல் கட்சிகளின் மத்தியிலும் ஆர்வத்தை கிளப்பியிருக்கின்றது.

அதாவது, ஆஸ்திரேலிய தனது நேசநாடுகளின் வேண்டுகோள்களுக்கு இணங்க வெளிநாடுகளுக்கு படைகளை அனுப்பி வைக்க, அவர்களும் ஆங்காங்கே சென்று "சேவை" செய்துவிட்டு வருவது வழக்கமாக நடைபெறுகின்றதொரு படிமுறை.

அந்த வகையில், இவர்கள் போன நாடுகளில் எல்லாம் ஏனைய நாட்டுப்படைகள் எக்கச்சக்கமான கொடூரமான செயல்களில் ஈடுபடுவதாக ஊடகங்களில் எப்போது பார்த்தாலும் பகீர் செய்திகளாக அவ்வப்போது வந்துகொண்டிருக்க, இவர்கள் மாத்திரம் நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்கிறார்கள் என்றால் எப்படி நம்புவது? எங்கேயோ இடிக்கிறதே! நூளை,வேறு நாட்டுப்படைகளோடு சேர்ந்து இவர்களும் ஏதாவது ஏடாகூடமான சம்பவங்களில் ஈடுபட்டார்கள் என்று ஊடகங்களில் போட்டு கிழிப்பதற்கு முன்னர், இவர்களின் அந்த "சேவைகள்" எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை கொஞ்சம் எட்டிப்பார்த்தால் என்ன என்று ஆஸ்திரேலிய அரசின் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளே இரகசிய நடவடிக்கை ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நடவடிக்கையின் பிரகாரம், போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடுகளில் ஆஸ்திரேலிய படையினர் எவ்வாறு தங்கள் கருமங்களை ஆற்றுகின்றனர் என்பதை அறிவதற்கு முக்கிய அதிகாரி ஒருவரை நியமித்திருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர்,தனது அறிக்கையை குறிப்பிட்ட அதிகாரி அதனை ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்திருந்தார்.

இந்த அறிக்கையை பார்த்த பாதுபாப்பு அமைச்சு அதிகாரிகள் தலைசுற்றி விழுந்துவிடாத குறையாக பல சம்பவங்கள் ஆஸ்திரேலிய படையினரின் "புண்ணியத்தில்" வெளிநாடுகளில் நடைபெற்றிருக்கின்றன என்கிறது "பெயார் பெக்ஸ் மீடியா" நிறுவனம்.

2012 ஆம் ஆண்டுக்கும் 2016 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த ஆஸ்திரேலிய படையினர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

அந்த சம்பவங்கள் போர்க்குற்றங்களாக முத்திரை குத்தப்படவேண்டியவையா என்று ஆராயப்படவேண்டியதாகவும் விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த விவகாரத்தை அறிந்த மாத்திரத்திலேயே ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு அவசர அவசரமாக - அதே வேளை மிகவும் இரகசியமாக - ஒரு முக்கிய விசாரணை அதிகாரியை நியமித்து, அவரின் முன்னிலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் படைச்சிப்பாய்களை அழைத்து விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

விடயம் இவ்வளவு சீரியஸாக போகப்போகிறது என்று ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு உட்பட ஆஸ்திரேலிய படைத்துறையினர் மற்றும் ஊடகங்கள்கூட எதிர்பார்க்கவில்லை.

விளைவு -

விவகாரம் ஊடகங்களில் கசிந்து விட்டது.

"பெயார் பெக்ஸ் மீடியா" நிறுவனம்தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த விவகாரத்தை முதன் முதலாக போட்டு உடைத்தது.

முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டும் இந்த இரகசிய விசாரணைகளுக்கு இதுவரை சுமார் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட படையினர் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் விசாரணைக்கு சென்றவர்கள் அனைவரும் உளச்சுத்தியோடு விசாரணைகளுக்கு ஒத்துழைக்கிறார்கள் என்றும் அந்த செய்தி வெளியானது.

சில விசாரணைகள் சுமார் நான்கு முதல் ஐந்து மணி நேரம்கூட நடைபெற்றிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

இந்த விசாரணைகளின் வழியாக சாதுவாக கசிந்த விவரங்களை அறிந்தபோது இரத்தமெல்லாம் உறைந்துபோகின்ற வகையில் அந்த தகவல்கள் அமைந்திருந்தன.

அதாவது, 2012 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் கான் முகமட் என்ற அப்பாவி சிறுவனை கொலை செய்த ஆஸ்திரேலிய படையினர் அந்த சம்பவத்தையே மூடி மறைத்துள்ளார்கள் என்றும் -

இன்னொரு சம்பவத்தில் ஆப்கான் வர்த்தகர் ஒருவரை கொலை செய்துவிட்டு அவரை ஆயுததாரியாக அடையாளப்படுத்துவதற்காக அவரின் மீது ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்றும் -

தகப்பனும் மகனும் ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்ட இன்னொரு சம்பவத்திலும் ஆஸ்திரேலிய படையினர் முக்கிய விசாரணைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகின.

இவை மாத்திரமல்ல, இன்னும் பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளையும் மேற்படி அதிகாரி மேற்கொள்ளத்தொடங்கியபோது "கிணறு வெட்ட பூதம் கிளம்பிய" கதையானது இந்த படலம்.

இப்படியான சம்பவங்கள் சமூக வலைத்தளங்களில் அடிக்கடி வெளியாகுவதுண்டு. சில வேளைகளில் தொலைக் காட்சிகளில் வெளியாவதும் வழக்கம். அப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம், அவற்றை மேற்கொண்டவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் என்று கூறப்படும் அல்லது அமெரிக்க இராணுவத்தினர் என்று தெரிவிக்கப்படும். ஏனைய நாட்டு படையினர் இப்படியான சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்படுவது மிகக்குறைவு என்றே கூறலாம்.

அதிலும்,ஆஸ்திரேலிய படையினர் தொடர்பாக ஆஸ்திரேலியா கட்டியெழுப்பி வைத்திருக்கும் விம்பம் வார்த்தைகளால் வடித்துவிட முடியாதது. நல்லதை தவிர வேறெதையும் செய்வதற்கு கனவிலும்கூட நினைக்காதவர்கள் என்பது போல இவர்களை ஒரு புனித படையினராகவே ஆஸ்திரேலிய கட்டமைத்து வைத்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் தேசிய விடுமுறைகளாக அனுட்டிக்கப்படும் 'அன்சாக் தினம்' மற்றும் 'ஆஸ்திரேலிய நாள்' ஆகியவற்றில் எல்லாம் ஆஸ்திரேலிய படையினரின் கீர்த்தியை புகழ்வதும் அவர்கள் தொடர்பாக நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் சித்திரமும் வித்தியாசமானது.

சிறுதொகையில் வெளிநாட்டு பணிகளுக்கென்று ஆஸ்திரேலிய படையினர் போய்வருவரும்போதும் அவர்களில் ஓரிருவர் போரில் உயிரிழக்கும்போது ஆஸ்திரேலிய ஊடகங்கள் அவர்கள் மீது காண்பிக்கும் கரிசனையும் துயரமும் அளவில்லாதது. தேசத்தை காப்பதற்காக சென்ற புனிதர்களுக்கு இடம்பெற்ற

(05ஆம் பக்கம் பார்க்க)



# ஆஸ்திரேலிய படையினரின்
# ஆப்கான் அட்டகாசங்கள்!
# பிரம்போடு வருகிறார் பிரதமர்

இரண்டாம் உலகப்போரின்போது ஆஸ்திரேலிய படைகளுக்கும் ஜப்பான் படைகளுக்கும் இடையில் நடைபெற்ற போர் முனையில், ஆஸ்திரேலிய படையினர் தனது நேச நாட்டு படைகளுடன் சேர்ந்து போரை வென்றிருந்தன.

ஆனால், போரின்போது ஜப்பான் நாட்டு படையினர் பெருந்தொகையான போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆஸ்திரேலியா தற்போது அகதிகளை தடுத்துவைத்திருக்கும் மானஸ் தீவு உட்பட சிங்கப்பூர், ஹொங்கொங் என எட்டு இடங்களில் 296 இந்த விசாரணை அமர்வுகள் நடைபெற்று போர்க்குற்றவாளிகளாக குற்றம் சுமத்தப்பட்ட நூற்றுக்கணக்காக ஜப்பானியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்த விசாரணைகள் அப்போதைய குயீன்ஸ்லாந்தின் முன்னாள் நீதியரசரின் கீழ்தான் நடைபெற்றன.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொல்லாத சம்பவமாகவே அதை வர்ணிப்பார்கள்.

உண்மையிலேயே இவர்கள் நாட்டின் புனித தன்மையை நிலை நாட்டுவதற்காக - நீதியான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் அவ்வாறு புகழ்பாடுவதில் ஒன்றும் தவறில்லை.

இராணுவம் என்றாலே மிகக்கொடூரமானது என்று நினைவுகள் ஆழமாக படிந்துபோன தமிழ் மக்களுக்குக்கூட இங்கு இராணுவத்தின் மீதான விம்பமும் அதற்கு அரசாங்கம் கொடுத்து வந்த வடிவமும் ஆச்சரியங்களாக இருந்திருக்கின்றன.

ஆனால், "அப்படியெல்லாம் இல்லை, எல்லா நாட்டு இராணுவங்களும் ஒரே மாதிரியானவைதான்" - என்பது போல, ஆஸ்திரேலிய படையினர் தொடர்பாக வெளிவந்திருக்கும் இந்த போர்க்குற்ற செய்திகளும் அவை தொடர்பான விசாரணைகளும் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த சம்பவங்களும் - விசாரணைகளும் ஒரு பக்கத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்க -

மறுபக்கத்தில் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைக்கும் படையினரை அச்சுறுத்தும் விதத்தில் ஆஸ்திரேலிய இராணுவத்திற்குள்ளேயே இன்னொரு தரப்பு, மாபியா ஸ்டைலில் இறங்கியிருப்பதாக "பெயார் பொக்ஸ் மீடியா" மற்றொரு செய்தியையும் வெளியிட்டு, வயிற்றில் புளி கரைத்திருக்கிறது.

அதாவது, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் உண்மையை கண்டறிவதும் அதற்கு பொறுப்புக்கூறுவதும் என்ற ஜனநாயக தன்மையின் கீழ் நடைபெற்று வருகின்றதொரு படிமுறை.

ஆனால், இந்த விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் - இதன் நீட்சியில் தங்களது தலைகளும் உருளப்போகிறது என்ற அச்சமடைந்துள்ள ஒரு தரப்பு, சாட்சிகளை மிரட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக "பெயார் பெக்ஸ் மீடியா" தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளின் மூலம் என்ன நீதி, யாருக்கு எவ்வாறு கிடைக்கப்போகிறது என்பதுதான் தற்போது மிகப்பெரிய கேள்வி.

இரண்டாம் உலகப்போரின்போது ஆஸ்திரேலிய படைகளுக்கும் ஜப்பான் படைகளுக்கும் இடையில் நடைபெற்ற போர் முனையில், ஆஸ்திரேலிய படையினர் தனது நேச நாட்டு படைகளுடன் சேர்ந்து போரை வென்றிருந்தன.

ஆனால், போரின்போது ஜப்பான் நாட்டு படையினர் பெருந்தொகையான போர்க்குற்றங்ளில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆஸ்திரேலியா தற்போது அகதிகளை தடுத்துவைத்திருக்கும் மானஸ் தீவு உட்பட சிங்கப்பூர், ஹொங்கொங் என எட்டு இடங்களில் 296 இந்த விசாரணை அமர்வுகள் நடைபெற்று போர்க்குற்றவாளிகளாக குற்றம் சுமத்தப்பட்ட நூற்றுக்கணக்காக ஜப்பானியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்த விசாரணைகள் அப்போதைய குயீன்ஸ்லாந்தின் முன்னாள் நீதியரசரின் கீழ்தான் நடைபெற்றன.

1945 ஆம் ஆண்டுக்கும் 1951 ஆம் ஆண்டுக்கும் இடையில் 924 பேருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த விசாரணைகளில் 148 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் உறுதிசெய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள். 496 பேருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.



இவ்வாறு சிறைத்தண்டனை வழங்கப்பட்டவர்கள் மானஸ் தீவில் அமைக்கப்பட்ட சிறைகளில்தான் தண்டனையை நிறைவேற்றிவிட்டு நாடு திரும்பினார்கள்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான கொடூரமான குற்றவாளிகள் இந்த விசாரணைகளில் சரியான சாட்சியங்கள் இல்லாமல் தப்பித்துமுள்ளார்கள் என்று ஆவணங்கள் கூறுகின்றன.

ஆக, போர்குற்றங்கள் தொடர்பான விகாரத்தில் ஆஸ்திரேலியாவுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. அனுபவமும் இருக்கிறது. இப்படியானதொரு நிலையில் தங்களது படைகளை தூயவர்களாக பேணுவதும் குற்றவாளிகளாக இனங்காணப்படுமிடத்தில் அதற்குரிய தண்டனைகளை வழங்குவதும்கூட ஆஸ்திரேலியாவின் பெரும் பொறுப்பாக உள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் விசாரணைகள் உண்மையிலேயே பாரதூரமானவை என்றால், உள்நாட்டில் விசாரிக்கப்படுவதா அல்லது பொது நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்லப்படுவதா என்பதெல்லாம்கூட விவாதத்துக்குரிய விடயங்கள்.

இதற்கிடையில், நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த விசாரணைகளை இராணுவ விவகாரமாக கருதி - நாட்டின் பாதுகாப்பு, தேசிய இரகசியம் என்ற சொற்களுக்குள் பதுக்கிவிடாமல் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். முக்கியமாக எதிர்க்கட்சி என்ற வகையில் தங்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் என்று குரல் கொடுத்திருக்கிறது லேபர் கட்சி.

இவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்த பிரதமர் ஸ்கொட் மொறிஸன் குறிப்பிட்ட விவகாரம் தொடர்பான விரிவான விசாரணைப்பொறிமுறையை எவ்வாறு கையாளுவது என்பதில் முடிவெடுப்பதற்கு தயாராகியிருக்கிறார்.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 41 நவம்பர் 2020 தொ.பே:1800 960162

# தமிழர்களின் கமலாக்கனவுகள்

அமெரிக்காவின் உப ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் என்பவரது பெயர் அறிவிக்கப்பட்ட நாள்முதலாக தமிழ்பேசும் நல்லுலகத்திலிருந்து அவரை நோக்கிய பஜனைகள் ஆரம்பமாயின. அவரது பூர்வீகத்தை கண்டுபிடித்து தமிழராக பெருமைகொள்வதற்கு நாடுகள் கடந்து - தேசங்கள கடந்து - நகரங்கள், ஊர்கள் என்று பஞ்சாயத்துவரைக்கும் போட்டிகள் நடந்தன.

ஒரு சாரார், அவர் தமிழகத்தை சேர்ந்தவர் என்றார்கள். இன்னொரு தரப்பினர், 'அவர் இலங்கை' என்றனர். அவரது அந்தக்காலத்துக்காட்சிகள் என்று ஒருதொகை மடிசார் மாமி புகைப்படங்கள் சமூக வலைத்தளங்கள், வட்ஸ் அப் குழுமங்கள் அனைத்திலும் பெருநதியாக ஓடித்திரிந்தன.

இவ்வாறு கமலா ஹரீஸின் பூர்வீகத்துக்கான பங்குச்சண்டை இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், அமெரிக்க தேர்தல் முடிவுகள் வெளியாகி கமலா ஹரீஸின் வெற்றியும் உறுதியானது.

### சொல்ல வேண்டுமா?

அதுவரை, கமலா ஹரீஸிற்கு காவடி எடுத்துக் கொண்டிருந்தவர்கள், திடீரென்று அலகு குத்தி ஆடத்தொடங்கினார்கள். கற்பூரத்தில் அடித்து சத்தியம் செய்து "தமிழகத்தின் அன்னையே" - என்று அவர் படத்தக்கு முன்னால் நின்று அறைகூவினார்கள்.

மறுபுறத்தில், "கமலாக்கா..." - என்று பாசம் பொங்க பாயாசம் காய்ச்சிக்கொண்டிருந்த இலங்கையர்கள் சும்மா இருப்பார்களா? இன்னும் கொஞ்சம் ஆழமாக சென்று, கமலா ஹரீஸின் சொந்த இடம் யாழ்ப்பாணம் என்றும் குறிப்பாக அவரது "அம்மா மானிப்பாய், அப்பா மட்டக்களப்பாம்" என்றும் அநாயாசமாக அடித்துவிட்டார்கள்.

இலங்கை ஊடகங்களும் தங்களது பங்குக்கு கண்ணில் அகப்பட்ட தகவல்களையெல்லாம் பக்கம் பக்கமாக உருட்டி விளையாடினார்கள். கச்சேரிக்குப்போய் பிறப்பு அத்தாட்சி பத்திரங்களை நோண்டாததுதான் குறை.

இந்நிலையில்தான், கமலா ஹரீஸின் உண்மையான பூர்வீகம் பற்றிய தகவல்கள் வெளியாயின.

தமிழகத்தில் அந்தக்கால மெட்ராஸ் - இந்தக்கால சென்னையில் - 1938 இல் பிறந்தவர் சியாமளா. இவரது தகப்பன் கோபாலன். நிர்வாக உத்தியோகத்தராக பணியிலிருந்தவர். பின்னர், இவர்கள் பம்பாய், கல்கத்தா என்று புலம்பெயர்ந்து சென்றுள்ளார்கள். அப்போதெல்லாம், போன போன இடங்களில் நன்றாக படித்து பல பட்டங்களை வாங்கியவர் சியாமளா.

1958 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்புக்காக சென்ற சியாமளா அங்கு, தன்னோடு கல்வி கற்ற டொனால்ட் ஜஸ்பர் ஹரீஸ் என்பவரை காண்கிறார். காதலித்து திருமணம் செய்துகொள்கிறார்கள். 1961 இல் சியாமளா கலாநிதி பட்டத்தையும் பெற்றார்.

இவர்கள் இருவருக்கும் 1964 ஆம் ஆண்டு ஒக்டோர் 20 ஆம் திகதி பிறந்தவர்தான் கமலா ஹரீஸ்.

மானிப்பாய் என்றும் மட்டக்களப்பு என்று உருட்டி விளையாடப்பட்ட அமெரிக்காவின் 49 ஆவது உப ஜனாதிபதி பிறந்தது உண்மையில் அமெரிக்காவில்.

உறுதிசெய்யப்பட்டிருக்கும் இந்த குடும்ப வழியை வைத்துப்பார்க்கும்போது, கமலா ஹரீஸிற்கு சேலை உடுக்கத்தெரிந்திருக்கும் என்பதே சந்தேகம்தான். அதற்குள் "அவர் தமிழில் பேசுவார், இளையராஜா பாட்டுத்தான் கேட்பார்" - போன்ற வட்ஸ் அப் வாத்தியார்களின் புலம்பல்கள் அனைத்தும் வெறும் தும்புமுட்டாஸ் தகவல்கள். அவ்வளவுதான்.

கமலா ஹரீஸை நோக்கி தமிழர்கள் கிளர்ந்தெழுந்த இந்த விடயத்தை ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த பொதுவான மனவோட்டமாக பார்க்க முடியாவிட்டாலும், ஒருவிதத்தில் உணர்ச்சிவசப்பட்ட பெருந்திரள் மக்களின் பிரதிபலிப்பாக பார்க்கமுடியும்.

இன்னொருவகையில், பொய்களை நம்புவதற்கு பெருவிருப்போடு அலைகின்ற முகநூல் மனநிலை கொண்ட ஒரு கூட்டமாகவும் நோக்கமுடியும்.

### இவற்குப்பின்னாலுள்ள வலுவான உளவியல் என்ன?

மாபெரும் இன அழிப்பொன்றினை சந்தித்து, தனது இனத்தில் பெருந்தொகையான மக்களையும் வீரம் மிகுந்த போராட்டம் ஒன்றையும் இழந்துபோன தமிழ்மக்கள், தமக்கான கொழுகொம்பொன்றை வெறியோடு தேடிக்கொண்டிக்கிறார்கள் என்பது அசைக்கமுடியாத உண்மை.

தங்கள் இழப்புக்களிலிருந்து எழுந்துவரக்கூடிய திராணியையும் தாங்கள் இழந்தவற்றுக்கெல்லாம் பலமான பதிலடியொன்றை கொடுப்பதற்கு வலுவான கருவியும் அகப்படாதா என்று எப்போதும் எதிர்பார்த்த படியிருக்கிறார்கள்.

இதனை அரசியல் ரீதியாக சாத்தியமாக்குவதற்கான ஏதுநிலைகள் தாயகத்தில் நாளுக்கு நாள் அருகிக் கொண்டே போகின்றன என்பது ஏற்றுக்கொண்டாக வேண்டிய கசப்பான உண்மை. இலங்கை என்ற நாடு முற்றுமுழுதாகவே சிங்கத்தின் வாயில் அகப்பட்டுப்போன தீவாகி, அங்கு தமிழர்களின் இருப்பு எனப்படுவது யாருடனாவது சார்ந்து - சகவாழ்வு, சமத்துவ வாழ்வு என்று சளாப்பியடிபடப்போகிறதே தவிர, தனித்துவ அடையாளம் கொண்டதாக இருக்கப்போவதில்லை. பூர்வீக உரிமைகள் கிடைக்கப்போவதுமில்லை. அநீதிகளுக்க பரிகாரமும் கிட்டப்போவதில்லை.

மாபெரும் விடுதலைக்கனவோடிருந்த ஈழத்தமிழ் மனநிலை இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு தயாரில்லை. எப்படியாவது - எவ்வழியிலாவது - பழைய நிலையை கொண்டுவரவேண்டும், தமிழ் மக்களுக்கு தனித்துவமான ஆட்சியை பெற்றுவிடவேண்டும், இழப்புக்கான நீதியைப்பெற்றுவிடவேண்டும் என்று அங்கலாய்க்கிறது.

இதற்காக, இனமனநிலையோடு தமக்கான ஆதவுத்தளங்களை தேடித்திரிகிறது.

முன்பு, ஐ.நாவின் பெருநிலை அதிகாரியாக திருமதி. நவநீதம்பிள்ளை வந்தபோதும், இதேபோன்றதொரு எதிர்பார்ப்பு பொங்கியது. அவர் அலுவலகத்துக்கு வந்து அடுத்த விநாடியே, விலங்கோடு சிறிலங்காவுக்கு சென்று மகிந்தவை அடித்து இழுந்து வந்து , விமானத்தில் ஏற்றிக்கொண்டுவந்து, மின்சாரக்கதிரையில் இருத்தி, போர்க்குற்றங்களுக்கு தண்டனை கொடுப்பார் என்று எதிர்பார்த்தது.

அது நடைபெறவில்லை என்றவுடன் நவநீதம்பிள்ளை சிங்களத்திடம் விலைபோய்விட்டார் என்றுகூட குற்றச்சாட்டுக்கள் பல திசைகளில் பறந்தன.

இப்போது அதேபோன்றதொரு - அல்லது அதைவிட அதிகமான - உள்ளக்கிளர்ச்சியோடு கமலா ஹரீஸை நோக்கிய அங்கலாய்ப்புக்கள், ஆரவாரங்கள் தமிழர் தரப்பிலிருந்து கிளம்பியிருக்கின்றன.

இவற்றின் அடிப்படையை இன்னும் ஆழமாக பார்த்தால், சராசரி ஈழத்தமிழ் மனம் என்பது, தன்னை ஒத்த - தன் இனம் சார்ந்த - தன் மொழி அறிந்த ஒருவனோ ஒருத்தியோதான் தன்னை புரிந்துகொள்ளக்கூடியது என்று தீர்க்கமாக நம்புகிறான். இந்த மொழிச்சிக்கல் அல்லது இனச்சிக்கல் என்ற தடைமாத்திரம் நீங்கிவிட்டால், எல்லோருடனும் இறுக்கமான உறவு கிட்டிவிடும் என்றும் ஈழத்தமிழ் மனநிலை நம்புகிறது.

இங்குதான் பெரும் சிக்கலே எழுகிறது. தமிழ்மனம் நோக்கிய கேள்வியே எழுகிறது.

அதாவது, மொழியாலும் இனத்தாலும் தனக்கான ஒட்டுறவு - தன்னை நோக்கிய இந்த உலகின் புரிதல் தடைப்பட்டுள்ளதாக நம்புகின்ற தமிழ்மனம், ஒருபோதும் தான் அதைத்தாண்டிச்செல்வதற்கு முயற்சிப்பதில்லை. தன்னை நோக்கி மற்றவர்கள் தடைதாண்டி வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அதுவும் எப்படி? தனது பிரச்சினையை தீர்ப்பதற்கு மற்றவன் தடைதாண்டி வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

### எவ்வளவு குரூரமான - சொகுசான - எதிர்பார்ப்பு?

இதுதான் இங்கு மிகப்பெரிய போராட்ட முரணும் அவலமும்.

இன்று கமலா ஹரீஸையே எடுத்துக்கொள்வோம். சென்னையில் பிறந்த அவரது தாய் கல்வியின் ஊடாக தனக்கு முன்னிருந்த தடைகளை தாண்டியோடினார். அமெரிக்காவரை சென்றார். தனது "ஓடுதடியை" மகளிடம் கொடுத்தார், அவர் ஓடிய தீராத ஓட்டம்தான், இன்று கமலா ஹரீஸினை உலகின் மிகப்பெரிய வல்லரசின் துணை ஜனாதிபதியாக்கியிருக்கிறது.

இது ஒருவகையில், கமலாவின் தயார் சியாமளா தொடங்கிய - இன்னும் ஆழாக சொல்லப்போனால், தஞ்சாவூரிலிருந்து முப்பதுகளிலேயே பிரித்தானியர்களது நிர்வாகத்தில் துணிச்சலாக பணியாற்றக்கிளம்பிய - அவரது தகப்பனாரின் வெற்றிப்பயணம். ஈற்றில், அந்த வெற்றிக்கனியை கமலா பறித்திருக்கிறார்.

ஆக, தடைகளைத்தாண்டி ஓடவேண்டிய ஒரு தலைமுறைக்கு வழிகாட்ட வேண்டிய கட்டத்திலிருப்பவர்கள் ஈழத்தமிழர்கள். அவர்களது ஆயுதப்போராட்டம் ஒரு புள்ளியில் முடங்கியது உண்மை. முற்றுப்பெற்றது உண்மை. அதிலிருந்து எழுந்து புதுவழியை தேடாமல், கமலாக்களை தேடிக்கொண்டிருந்தால் எப்பயனும் வந்து சேராது.

கமலாவின் தாயார் சென்னையில் படித்துவிட்டு, மீண்டும் தகப்பனின் தஞ்சாவூருக்கே திரும்பிச்சென்று அரசுப்பள்ளியொன்றின் கரும்பலகையோடு ஒட்டிக்கொண்டு நின்றிருந்தால், இன்று இந்த வரலாறு சாத்தியமாகியிராது.

இந்த அடிப்படை சிந்தாந்தத்தை புரிந்துகொள்வதற்கு தேவையானது, எதையும் அதன வழி சென்று எதிர்கொள்ள தயாராகவேண்டும். நோகாமல் விடுதலையை பெறலாம் என்ற நோய்க்கூறு மிக்க எதிர்பார்ப்பை வெட்டிப்புதைக்க வேண்டும்.

"நாங்கள் படுத்திருந்து வரம் கேட்டால், தெய்வம் தூங்கியபடிதான் அருள்கொடுக்கும்" - என்பார்கள்.

தமிழர்கள் தூங்கிபடியே இருந்தால் கமலக்கனவுகளில்தான் தொடரவேண்டிவரும்.

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# கால் வைக்கும் இடமெங்கும் கண்ணிவெடி வைத்திருக்கும் பாஜக மீதான தமிழக நேசம்!

●எழுத்தாளர் முத்துகிருஷ்ணன்

இந்தியாவில் ஒற்றை இந்து கலாச்சாரத்தை நிறுவ வேண்டும், இந்தியாவை ஒரு மத அடையாளம்கொண்ட வல்லரசாக மாற்றவேண்டும்" - என்கிற இலக்குகளுடன் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) மக்களை நோக்கி வந்தது. 2014 முதல் நரேந்திர மோடியின் தலைமையில் பாஜக கட்சி இந்தியாவில் ஆட்சிசெய்து வருகிறது.

இந்தியா முழுமையிலும் உள்ள மாநிலங்களில் தன் கட்சியை வலுப்படுத்த வேண்டும் என்கிற ஒற்றைக்குறிக்கோளுடன் இயங்கும் பாஜக கட்சி, தொடங்கப்பட்ட காலத்தில் A party with a difference என்று ஒரு பிரகடனத்துடன் மக்களை நோக்கி நகர்ந்தது.

இந்திய நாட்டையே ஆட்சி செய்யும் ஒரு கட்சியின் - பல்வேறு மாநிலங்களில் ஆட்சி செய்யும் ஒரு கட்சியின் - தமிழக நிலைமை என்ன? தமிழக மக்களிடம் இந்த கட்சியால் "இதுதான் எங்கள் கொள்கை, இதுதான் எங்கள் சித்தாந்தம்" - என்று சொல்வதற்கு ஏதேனும் உள்ளதா??

தமிழகத்தின் ஒரு கிராமத்தில் இருக்கும் டீ கடை பெஞ்சில், "தமிழக பாஜகவின் நிலை என்ன"என்று நீங்கள் விசாரித்தால், "பரிதாபம்' என்கிற ஒற்றைச் சொல்தான் பதிலாக கிட்டும்.

"வலிமைமிக்க இந்தியா" என்கிற பெரும் பதாகையுடன் நுழைய முற்படும் பாஜக கட்சியால், வலிமை மிக்க சிந்தாந்தங்களுடன் திகழும் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை. ராமர் கோவில் தொடங்கி, வல்லரசு இந்தியா, போர் வெறி என்கிற அவர்களின் ஆயுதங்கள் என்று அனைத்துமே, வலிமைமிக்க ஒரு மாநிலத்தின் முன்னால் எடுபடாமல் போயின.

வலிமை மிக்க இந்தியா என்றால் வலிமை மிக்க மாநிலங்கள்தான், மாநிலங்கள் சுயாட்சியுடன் வலிமைமிக்கவையாக இருக்கவேண்டும், மாநிலங்களின் பொருளாதாரம் வலிமைமிக்கதாக இருக்கவேண்டும். தமிழகத்தை இந்தியாவின் எந்த ஒரு மாநிலத்துடனும் நீங்கள் ஒப்பிடமுடியாது. பொது விநியோக முறை, சுகாதாரம், கல்வி, அரசு பள்ளிகள், ஆசிரியர் மாணவர் விகிதம், பொறியியல் கல்லூரிகள், மருத்துவ கல்லூரிகள், சாலைகள், அடிப்படை கட்டமைப்புகள், குடிதண்ணீர், மின்சார விநியோகம், இறப்பு விகிதம், மழை நீர் சேகரிப்பு, வேலைவாய்ப்புகள் என எவற்றிலும் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

கழிவு மேலாண்மை, நிலச் சீரழிவு, காற்று மாசுமுதல் இந்தியாவின் அதிகப்படியாக வரி வசூல் செய்து, நிதி நிலைமையில் திடமாக உள்ள மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பாஜகவின் நித்திரையை கலைக்கு விசயங்கள் இவை. பாஜகவினால் ஆட்சி செய்யப்பட்ட மாநிலங்களை - ஏன் நரேந்திர மோடி தொடர்ந்து 13 ஆண்டுகள் ஆட்சி செய்த குஜராத் மாநிலத்தை - கொஞ்சம் தமிழகத்துடன் ஒப்பிட்டு பாருங்கள். நிலைமை விளங்கும்.

இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ யார் காரணம்? நிச்சயம் இங்கே தொடர்ந்து ஆட்சிசெய்து - நிர்வாகம் செய்த - கட்சிகளே காரணம். அப்படியெனில் இங்கே ஒரு நல்லாட்சிதானே நடைபெற்றிருக்கவேண்டும். தமிழகத்தை யார் ஆட்சி செய்தார்கள்? திராவிடக் கட்சிகள்தான் மாறி மாறி ஆட்சி செய்தார்கள். அப்படியெனில், இந்தியாவின் சாதனை மாநிலமாக திகழும் தமிழகத்தை, எவ்வகையில் மூளைச் சலவை செய்தாலும் அசைந்துவிடக்கூடாதே?

இங்குதான் பாஜகவின் வியூகங்களை சற்று ஆழமாக அறியவேண்டியிருக்கிறது.

பாஜக. தன்னை பலப்படுத்திக்கொள்ள நாளுக்கு நாள் பின்பற்றிய நடைமுறைகள் அந்த கட்சியை மக்களுக்கு இன்னும் நெருக்கமான அறிமுகம் செய்து வைத்துள்ளன.

தமிழகத்தில் பாஜகவிற்கு வெகுமுன்னரே ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி என ஒரு இரண்டு டஜன் அமைப்புகளை நிறுவி, கடந்த இருபது ஆண்டுகளாக மதக் கலவரங்கள், இந்து-முஸ்லிம் ஒற்றுமையை பிளவிபடுத்தும் செயல்கள், ஜாதிய துவேசங்கள் என சிறிய சிறிய செயல்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்துவந்தார்கள். தமிழகத்தின் பல ஊர்களில் அவர்களின் பொய் பிரச்சாரம் அல்லது வந்ததி பரப்பும் வேலையாக போஸ்டர்கள் அடித்து ஒட்டுவது, பதட்டத்தை ஏற்படுத்துவது என குட்டி குட்டி பிராஜெக்டுகளை செய்தார்கள்.

மோடி ஆட்சிக்கு வந்த பிறகு - அவர்களின் மத்திய ஆட்சியை வைத்துக் கொண்டு - மெல்ல மெல்ல தமிழகத்தின் ஊடகங்கள் அனைத்தையும் தங்களின் கடுப்பட்டிற்குள் கொண்டு வந்து, ஊடகங்களின் வழியாக பாஜக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் செயல்களை தொடங்கியது. வாய் கூசாமல் பொய்



பேசுவது, ஆதாரங்கள் ஏதுமின்றி எதிரிகளின் மீது சோற்றை வாரி இறைப்பது என பாஜகவினர் தமிழக அரசியலில் எப்பொழுதும் நாம் காணாத தரம்தாழ்ந்த பேச்சுக்களை அறிமுகம் செய்தனர். தினமும் அவர்கள் செய்யும் பொய் பரப்புரைகளை முன்வைத்து குளிர் காய்ந்தார்கள். ஆனால் பாஜகவினரின் தரம் தாழ்ந்த பேச்சு பாணி, தமிழக மக்களிடையே முகசுழிப்பையே ஏற்படுத்தியது.

இந்தியாவிலுள்ள வறுமை, வேலையின்மை எனும் மக்கள் சார்ந்த பிரச்சனைகளில் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு கவனம் செலுத்தியதில்லை, பேசியதில்லை. ஆனால் தினசரி மத, ஜாதி உணர்வுகள், ஜாதிய மேன்மை, மத தூய்மை என தங்களின் கடையை விரிப்பார்கள். "இந்தியா ஆபத்தில் இருக்கிறது" என்று தொடர்ந்து, பாகிஸ்தான் - சீனா என்று வைத்த ஒப்பாரிகள் வட இந்தியாவில் - உள்ள இன்னும் வளர்ச்சியை, சமூகநீதியை கண்டிராத மக்களிடன் - எடுபடலாம் ஆனால் தமிழகத்தில் மத நம்பிக்கைகளையும் சமூக நீதி அரசியலையும் நன்கு அறிந்து, தங்களின் வாழ்வில் கடந்த 50 ஆண்டுகளாக மக்கள் பெரும் மாற்றங்களை கண்டிருப்பதால், பாஜகவின் சித்துவேலைகள் எடுபடவில்லை.

தமிழகத்தில் சினிமாவின் வழியே வந்தவர்கள்தான் ஆட்சியை பிடித்திருக்கிறார்கள், அதனால் நாமும் சினிமாவின் வழியே தமிழக கூரையில் ஏறி கோழி பிடித்து விடலாம் என்று பாஜகவினர் ரஜினி வீட்டை நோக்கி படையெடுத்தார்கள்.

ரஜினியின் வீட்டிற்கு செல்ல, வேட்டியை கட்டியதுமுதல் மோடி தமிழகத்திற்கு மட்டுமே என செய்து கொண்ட ஒப்பனைகள் கொஞ்சம் நஞ்சம் அல்ல. குருமூர்த்தி முதல் தமிழருவி மணியன்வரை பலரும் முயன்றும் முற்றாக பயன் கிட்டவில்லை. ரஜினி சினிமா வேறு, ரஜினி எனும் தனி நபர் வேறு என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். ரஜினியின் வாடகை பாக்கி முதல் அவர் வரி கட்ட முடியாது என்று வழக்கு போட்டு நீதிபதிகளிடம் மரண மொக்கை வாங்கியதுவரை ரஜினி செய்யும் ஒவ்வொரு காமெடியையும் மக்கள் ரசித்தார்கள்.

ரஜினி ஒரு பக்கம் என்றால், மறுபக்கம் கங்கை அமரன், கஸ்தூரிராஜா, ராதாரவி, கவுதமி, நமீதா, விஜயகுமார், காய்த்ரி ரகுராம், பேரரசு, எஸ்.வி சேகர், பவர் ஸ்டார் ஸ்ரீனிவாசன், ஜாதி வெறியர் கருணாஸ் என்று அனைவரையும் வலைவீசிப்பிடித்தும் சினிமா ஓய்வுதியர்கள் சங்கம் ஒன்றை மட்டுமே அவர்களால் உருவாக்க முடிந்தது.

இவர்கள் அனைவருமே தங்களின் சினிமா வாழ்வை எல்லாம் முடித்துவிட்டு, தங்களின் பேரக்குழந்தைகளுடன் விளையாடும் காலத்தில், பாஜக இவர்களை வைத்து எப்படியாவது தமிழக மக்களிடம் சென்றுவிடலாம் என்று பகல்கனவு கண்டு வருகிறது.

காமெடி நடிகர் வடிவேலு வீட்டிற்கு இப்பொழுது படை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியில் இருந்து குஷ்புவை அவர்கள் வெற்றிகரமாக பாஜகவில் இணைத்திருக்கிறார்கள் என்றாலும், குஷ்பு குறுகிய காலத்தில் மூன்று கட்சிகள் மாறி மாறி சென்றதால், அவர் அரசியல்களத்தில் என்றும் அடிமட்டத்தில் வேலை செய்த அனுபவம் இல்லாதவராகவே திகழ்கிறார்.

சினிமா ஒரு புறம் என்றால், மறுபுறம் தமிழகத்தில் உள்ள பெரிய அரசியல் கட்சிகளான திமுக, அதிமுக, தேமுதிக, காங்கிரஸ் என - தங்களின் சிந்தாந்தத்தில் இருந்து நேர் எதிர் சிந்தாந்தங்கள் உள்ள - கட்சிகளிலிருந்தும் ஆட்களை வேட்டையாட முயற்சிக்கிறார்கள். இப்படி அழைத்து வந்தவர்களை தக்கவைக்க பதவிகள் வழங்கப்படுவதும், அதேநேரம் இந்த கட்சியில் தொடக்க காலத்தில் இருந்து வந்தவர்களுக்கு பதவிகள் கொடுக்காமல், அவர்களை ஓரம் கட்டுகிற வேலையையும் பாஜக தலைமை செய்கிறது.

இதன் அடுத்த கட்டமாக தமிழகத்தில் உள்ள ரவுடிகள் எனும், சமூக விரோதிகளை பாஜக வெளிப்படையாக தன் கட்சியில் இணைத்து வருகிறது. காவல் நிலையங்களில் ஏராளமான கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள பிரபல ரவுடிகளை வீடு தேடி செல்கிறார்கள் பாஜகவினர். கல்வெட்டு ரவி மீது மட்டும் 6 கொலை வழக்குகள் உள்ளிட்ட 35 வழக்குகள் உள்ளன. ரவுடி சத்யா மீது 10 வழக்குகளும் - அதில் இரண்டு குண்டர் சட்டமும் பாய்ந்த வழக்குகளும் உள்ளன. ஜாமினில் வெளிவந்த அவர் பாஜகவில் இணைகிறார். சமீப காலமாக பாஜக கட்சியில் உறுப்பினர் சேர்ப்பு எங்காவது நடைபெற்றால், உடனே தமிழக காவல் துறை அங்கே சென்று, அவர்கள் நீண்ட நாட்களாக தேடி வரும் கேடிகளை ரவுடிகளை - அங்கே பிடித்து விடலாம் என்று முகாமிட்டு காத்திருக்கிறது. இது எத்தனை பெரிய அவமானம். ஆனால், பாஜகவின் தமிழக தலைவர் அந்த ரவுடிகள் பாஜகவின் இணைந்தால் திருந்திவிடுவார்கள் என்று கூச்சமில்லாமல் பத்திரிக்கைகளுக்கு பேட்டியளிக்கிறார்.

"தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த முருகன் அவர்களை எங்கள் கட்சியின் தலைவராக அறிவித்து விட்டோம்" - என்று மார்தட்டிக்கொண்டு அலைந்தார்கள், ஆனால், அந்த முருகனை பாஜகவின் பார்பன தலைமை எப்படி நடத்தியது என்பதை அவர் பதவியேற்ற சில காலம் அவரை சூழந்தவர்களின் உடல் மொழியை வைத்தே தமிழக மக்கள் மதிப்பிட்டார்கள்.

இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தும் அவரது மனைவி சவீதாவும் ஒடிசா மாநிலம் புரி மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஜகன்னாதர் கோவிலுக்கு சென்ற போது, அங்கே கோவில் கருவறைக்குள் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை, இதுதான் இந்தியாவில் பாஜக மனுஸ்மிருந்தியின் அடிப்படையில் நிறுவ முயலும் ஆட்சி. இந்த அடுக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் இந்தியாவின் தனித்தன்மை என்று வாய் கூசாமல் பேசும் சனாதனவாதிகள் தமிழகத்தில் நிறுவப்படுள்ள சமூக நீதியை கேலி செய்வது காலத்தின் கோலம்.

"மிஸ்டு கால்" கட்சியாக பாஜகவை மலரவைக்க தமிழிசை என்னென்னவோ செய்து பார்த்தார், கோடிக்கணக்கானவர்கள் "மிஸ்டு கால்" கொடுத்துவிட்டார்கள் என்றார்கள். ஆனால், யார் மிஸ்டு கால் கொடுத்தது என்பதை அவர்களால் இன்று வரை கண்டுபிடிக்கமுடியவில்லை.

நாளிதழ்களில் விளம்பரங்கள், தொலைக்காட்சி விவாதங்களில் அவர்களின் கருத்துக்களை மக்கள் மேல் திணிப்பது என்பதாக மக்கள் மத்தியில் ஒரு பிரதிநிதித்துவத்தை பெற்றுவிட பாஜகவினர் துடியாய் துடிக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் மத்தியில் ஆட்சியில் இருந்து கொண்டு நீட் தேர்வு விவகாரம், அனிதாவின் மரணம், ஒக்கி மற்றும் கஜா புயலில், தமிழகத்தில் ஜி.எஸ்.டி நிலுவை, தமிழகத்திற்கு புதிய திட்டங்கள் கொடுக்காமல் இருப்பது என, பாஜக தமிழகத்துக்கு சரியான உதவிகளை செய்யாமல் வஞ்சிக்கிறது என்பதை நன்கு அறிந்த தமிழக மக்கள் 2019 பாராளுமன்ற தேர்தலில் பாஜகவிற்கு தக்க பாடத்தை கற்றுக் கொடுத்தார்கள்.

பதவி அதிகார வெறி தவிர்த்து, கொள்கை என்று ஒன்று பாஜகவிடம் இல்லை என்பது கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது, தெற்கில் காலூன்ற வேண்டும் என்கிற வெறி அவர்களிடம் இருக்கிறது. ஆனால், அதற்கான ஒரு கொள்கை திட்டத்தை வகுக்க அவர்கள் பயப்படுகிறார்கள். திராவிட கட்சிகளின் மீது உப்புமூட்டை ஏறாமல் தமிழகத்தில் கால் ஊன்ற முடியாது என்பதையும் அவர்கள் நன்கு அறிந்துகொண்டார்கள். சி.பி.ஐ, அமுலாக்கத்துறை, வருமானவரித்துறை, ஊடகங்கள் என பாஜகவுடன் கூட்டணியில் உள்ள, இந்த துறைகளின் உதவிகளுடன்தான், இந்தியாவின் பல மாநில தேர்தல்களின்போது அந்தந்த மாநிலங்களில் கூட்டணிகளை தீர்மானித்தார்கள்.

வருகிற தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு முன், பாஜக எத்தனை அந்தர் பல்டிகளை அடிக்க போகிறது என்று அவர்களுக்கே தெரியவில்லை. இன்னும் எத்தனை குயுமுநுநேறுளு உலவ விடப்போகிறார்கள் என்று அவர்களுக்கே தெரியவில்லை. அவர்களின் தலைவர்கள் கொடுக்கும் விளக்கங்கள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றை கேட்டு தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள தலைசுற்றல் இன்னும் அடங்கவில்லை.

# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

நவம்பர் 2020 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்





கருணாகரன்

> இன்றைய அரசியல் முன்னெடுப்பாளர்களும் புலிகளைப் பின்பற்றுவோரும் கொண்டிருக்கும் செயற்பாடுகளும் வழிமுறைகளும் வேறானவை. இவர்கள் தமக்கிசைவான முறையில் எல்லாவற்றையும் உருமாற்றி வடிவமைக்க முற்படுகின்றனர்.

# சூரரைப் போற்று ரௌதிரம் பழகு!

காந்தி முன்னெடுத்த அரசியல் கோட்பாடும் வழிமுறையும் இன்று அடையாளமற்றுப் போய்விட்டன. பதிலாக அவற்றின் பெறுமதிகள் அழிக்கப்பட்டு வணிகமாக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது நடந்து கொண்டிருப்பது காந்தியை முன்வைத்த வணிக அரசியலே. இதற்குக் காந்தியும் காந்தியமும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வளவுதான். இப்படியே,பெரியார் முன்னிறுத்திய பகுத்தறிவு வாதமும் திராவிடக் கொள்கையும் பின்வந்தோரால் பயன்படுத்தப்படுகிறது. பெரியாரும் பெரியாரியமும் மெல்ல மெல்ல மறைக்கப்பட்டு, அவற்றைத் தமது அரசியலுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் போக்கு நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

காந்தியையும் பெரியாரையும் உரிய முறையில் முன்னெடுப்பதாக இருந்தால், அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். எவ்வாறு அவர்கள் தங்களை உருவாக்கிக் கொண்டனர்? வரலாற்றையும் தாம் வாழ்கின்ற சமூகச் சூழலையும் எப்படி விஞ்ஞானபூர்வமாக அணுகித் தங்கள் கொள்கையை வடிவமைத்தனர்? அதற்கமைய தங்களுடைய வாழ்க்கையை எப்படி ஒழுங்கமைத்தனர்? சவால்களை எப்படியெல்லாம் எதிர்கொண்டனர்? அதற்கான திராணியையும் உறுதிப்பாட்டையும் எப்படிக் கொண்டிருந்தனர் என்றெல்லாம் அறிந்து கொள்ளவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை நிகராகக் கொள்ளவேண்டும். அதற்கமையத் தம்மை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அவர்களுடைய வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்தது. கடுமையானது. அந்தச் சவால்களையும் கடுமையையும் தங்களுடைய அர்ப்பணிப்பான வாழ்க்கையினாலும் அரசியல் நேர்மையினாலுமே எதிர்கொண்டனர். அதில் கிடைத்த வெற்றியே அவர்களின் அடையாளம். அவர்களுடைய அரசியலுக்கான மதிப்பு.

ஆனால். இன்று அவர்களை முன்னிறுத்தி அல்லது அவர்களைப் பிரதிபலித்து அரசியல் செய்வோர் அந்தக் "கடுமையை" எதிர்கொள்ள முடியாதவர்களாகவே உள்ளனர். அதற்கேற்பத் தம்மை அர்ப்பணிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் தமக்கு வாய்ப்பான விதத்தில் அவர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் பயன்பாட்டுப் பொருளாக்கிக் கொண்டனர். இதற்கு காந்தியும் பெரியாரும் மக்களிடத்தில் பெற்றிருக்கும் குறையாத மதிப்பையும் அபிமானத்தையும் பயன்படுத்துகின்றனர்.

ஏறக்குறைய,இதை ஒத்த போக்குத்தான் ஈழச்சூழலிலும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஈழச்சூழல் என்பது புலம்பெயர் சூழலையும் உள்ளடக்கியதே. 2009 க்கு முன்பு விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழத்தை அடைவதற்கான அரசியல் கோட்பாட்டை முன்னிறுத்திப் போராடிக் கொண்டிருந்தது. அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அது தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுத்தது.

புலிகளின் செயல்முறை என்பது,அவர்களுடைய அரசியலை, அதன் இலக்கை நோக்கிய செயற்பாடாகும். இது, தேசம் ஒன்றைப் பற்றியது என்றவகையில் அந்தத் தேசத்தை உருவாக்குவதற்கான அடிப்படைகளைக்கொண்டு உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைகள், தேசத்துக்கான கட்டுமானங்களை உள்ளடக்கியவை. இதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்படுவதே புலிகளின் பண்பு. இந்த அர்ப்பணிப்புப் பண்பு கடுமையானது. அசாதாரணமான கடுமை இது. இதுவே மக்களிடத்தில் அவர்களுக்குக் குன்றாத மதிப்பை உண்டாக்கியுள்ளது. புலிகளிடத்திலிருக்கும் குறைபாடுகள், விமர்சனங்களை எல்லாம் மக்களின் மனதிலிருந்து இது மேவுகிறது. இதைக்குறித்த மாற்று அபிப்பிராயங்களும் விமர்சனங்களும் அரசியல் ரீதியாக யாருக்கேனும் இருக்கலாம்.

ஆனால், தாம் வலியுறுத்தி முன்னெடுத்த அரசியல் கோட்பாட்டுக்கு செயற்பாட்டு வடிவம் கொடுப்பதற்குத் தம்மை அர்ப்பணித்ததே புலிகளின் அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ளது என்பதை மறுக்கமுடியாது. இன்று புலிகளுக்கு மக்களிடம் உள்ள மதிப்புப் பெறுமானம் என்பதற்கு இது முக்கியமான காரணம்.

இந்த மதிப்புப் பெறுமானத்தையே 2009க்குப் பின்னர் தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுப்போரும் புலிகளைக் கொண்டாடுவோராகக் காட்டிக்கொள்வோரும் பயன்படுத்திவருகின்றனர். இதனை மாவீரர் நாள் நிகழ்விலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவு கூரல்வரையில் காணலாம். இங்கே புலிகளின் செயல் முறையும் அதற்கான அர்ப்பணிப்பும் மனதில் கொள்ளப்படுவதில்லை. பதிலாக தமக்கு வாய்ப்பான பகுதிகளே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஆனால், இன்று புலிகளின் அரசியல் தொடர்ச்சியை முன்னெடுக்க விரும்புவோர் அல்லது புலிகளின் அரசியல் தொடர்ச்சியாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கு விரும்புவோர், புலிகளைப் புரிந்து கொண்டு, அதற்கான மதிப்புடன் அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதுவே சரியானது. அதுவே நிகரானது. ஆனால், அப்படி நிகழவில்லை.

புலிகளின் தியாகத்தையும் அந்தத் தியாகத்தைப் போற்றுவதற்கு அவர்கள் உருவாக்கிய மாவீரர் என்ற அடையாளத்தையும் அந்த அடையாளத்தைக் கொண்டாடும் மாவீரர்நாள் என்ற நிகழ்வையும் பயன்படுத்த விளைகின்றனர். கூடவே,அவர்கள் உருவாக்கிப் பின்பற்றிய நினைவு கூருதல் என்ற அரசியல் முறையையும். இதற்கு அப்பால் எதையுமே அல்ல. ஒரு சிலர் மட்டும் புலிகள் மாவீரர் நாளை முன்னிட்டுத் தொடர்ந்து வந்த மரநடுகையைச் செய்கின்றனர். அதுவும்கூட ஒழுங்கமைக்கப்பட்டதாக இல்லை.

புலிகளின் மர நடுகை என்பது மரங்களின் தோப்பு அல்லது காடு வளர்ப்பு என்பதாகவே இருந்தது. குறிப்பிடப்படும் இடங்களைத் தேர்வு செய்து அந்த இடங்களில் மரநடுகைகளைச் செய்தனர்.

(IIIஆம் பக்கம் பார்க்க)

“போர் இல்லாத இருபது நாட்கள்” நாவலில் சொல்லப்படுவதைப்போல,“போரின் வெற்றிக்கு போரிட வேண்டும். அதற்காகப் பாடுபடவே வேண்டுமே ஒழிய, போரில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோ, வொட்கா அருந்திக் கொண்டு அதைப் பற்றிப் பேசுவதோ அல்ல”



# சூரரைப் போற்று ரௌத்ரம் பழகு!

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

அவை இன்று தோப்புகளாகவும் காடுகளாகவும் வளர்ந்திருக்கின்றன. வீதியோர மரநடுகை போன்றனவும் வெற்றியளித்தனவாகவே உள்ளன. இதற்குக் காரணம், மரநடுகை என்பதை அவர்கள் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு என்று இதைப் பிரக்ஞைபூர்வமாகக் கொண்டிருந்தமையே ஆகும். அப்படிப் பிரக்ஞைபூர்வமாகக் கொண்டு முன்னெடுக்கப்படாத எந்தச் செயற்பாடும் உரிய விளைவுகளை உருவாக்குவதுமில்லை. மதிப்பைப் பெறுவதுமில்லை.

எனவேதான் புலிகளின் மதிப்பான பகுதிகளை இவர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதை அழுத்தமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. அதுவும் இந்த மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படும் நாட்களில் இதைப்பற்றிய உரையாடலை ஆரம்பித்தே ஆக வேண்டும். அது புலிகளுடைய செயற்பாட்டுத் திறனுக்கும் அர்ப்பணிப்புக்கும் அளிக்கின்ற மதிப்பாக இருக்க முடியும்.

புலிகள் மாவீரர் நாள் என்ற நிகழ்வை உருவாக்கும்போதும் நினைவு கூருதல்களைக் கடைப்பிடிக்கும்போதும் பல காரணங்களும் தேவைகளும் இருந்தன. புலிகளுடைய போராட்டமானது கடுமையான சவால்கள் நிறைந்தது என்பதாலும் விட்டுக் கொடுப்பற்ற அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டது என்பதாலும் உயிர்த்தியாகங்களையும் செய்ய வேண்டியிருந்தது. இந்த உயிர்த்தியாகம் என்பது ஒன்று இரண்டுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. சாதாரணமான உயிரிழப்பாக நிகழ்ந்ததுமில்லை. ஆயிரக்கணக்கான போராளிகளின் உயிரிழப்பில் நிகழ்ந்தது. தம்முடைய உடலை வெடித்துச் சிதறும் அளவுக்கு உக்கிரமானதாக இருந்தது. எனவேதான்,இத்தகைய உயிர்த்தியாகத்தை அவர்கள் மகத்தானதாக, மாவீரர் தகைமயுடையதாகக் கொண்டனர். பாரதியாரின் வார்த்தைகளில் சொன்னால் சாதனையாளரை, செயற்கரிய மாவீரரை, அசகாய “சூரரைப்போற்று” என்பதாக வடிமைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மேலும் மேலும் போராடும் ஆற்றச் சிறப்பையும் திறனையும் அர்ப்பணிப்பு உணர்வையும்



போராளிகளிடத்திலும் இளைய தலைமுறையினரிடமும் அதிகரிக்க விரும்பினர். இழப்புகளுக்குரிய பெறுமதியை அவற்றுக்கு மாண்பளிப்பதன் வழியாக உருவாக்கினர். அதைச் சமூகப் பெறுமானமாக, மதிப்பாக ஆக்கினர். அந்தப் பெறுமானத்தைக் கொண்டு தங்களுடைய போராட்டத்தை முன்னெடுத்தனர். அது அவர்களுடைய அரசியல் வழிமுறை. செயற்பாடும் கோட்பாடும் கோட்பாடும் செயற்பாடுமாக இணைந்த வழிமுறையாக இருந்தது.

இன்றைய அரசியல் முன்னெடுப்பாளர்களும் புலிகளைப் பின்பற்றுவோரும் கொண்டிருக்கும் செயற்பாடுகளும் வழிமுறைகளும் வேறானவை. இவர்கள் தமக்கிசைவான முறையில் எல்லாவற்றையும் உருமாற்றி வடிவமைக்க முற்படுகின்றனர். அல்லது தம்மை அவற்றுடன் பொருத்திக் கொள்ளப்பார்க்கின்றனர். முக்கியமாக கடுமையற்ற விதமாக. செயற்பாட்டுத்திறனும் உறுதியற்றதுமாக.

இதனால்தான் இவை இன்று மதிப்பிறக்கம் செய்யப்படுவதாக உள்ளதெனக் கண்டனத்தைச் சந்திக்கின்றன. விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளன. கன்ஸன்தீன் ஸீமனவ்வின் “போர் இல்லாத இருபது நாட்கள்” நாவலில் சொல்லப்படுவதைப்போல,“போரின் வெற்றிக்கு போரிட வேண்டும். அதற்காகப் பாடுபடவே வேண்டுமே ஒழிய, போரில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோ, வொட்கா அருந்திக் கொண்டு அதைப்பற்றிப் பேசுவதோ அல்ல” - என்பது இதை ஒத்த விமர்சனமே.

இதன் அர்த்தம் இப்போதும் போரை முன்னெடுப்பது என்பதல்ல. முன்னெடுக்கப்படும் அரசியலில் தெளிவும் உறுதியும் செயற்பாட்டுத்திறனும் அதற்கான அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

2009 க்குப் பின்னர் மாவீரர் நாள் என்பது இலங்கையின் வடக்குக் கிழக்கில் அரசியலை முன்னெடுப்போர் தமது அரசியல் நலன்களுக்கான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தும் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. இதனால்தான் கடந்த ஆண்டுகளில் இதையிட்ட கண்டனங்களும் விமர்சனங்களும் கடுமையான முறையில் போராளிகளாகச் செயற்பட்டோரினாலும் மாவீரர் குடும்பங்களினாலும் முன்வைக்கப்பட்டன. இதைக்குறித்த விமர்சன ரீதியான இலக்கியக் குரல்களும் எழுந்தன. இதுவே முள்ளிவாய்க்கால் நினைவு கூரல், திலீபன் நினைவு கூருதல் போன்றவற்றிலும் உள்ளது.

ஏறக்குறைய,இதை ஒத்த நிலையே புலம்பெயர் சூழலும் நிலவுகிறது. மாவீரர் நாளை கேளிக்கை நிகழ்வாக, அரசியற் செல்வாக்குக்குரிய நடவடிக்கையாக மாற்றும் முயற்சிகள். 2009 க்குப் பின்னர் புலம்பெயர் சூழலில் இயங்கும் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்களும் அமைப்புளும் போராளிகளாக இருந்தோரும் வெவ்வேறு அணிகளாக மாவீரர் நாள் நிகழ்வைக் கடைப்பிடித்ததை இங்கே நினைவு படுத்தலாம். இதைப்போலவே பல பங்குச் சண்டைகள்.

மாவீரர் நாள் நிகழ்வு, பிற நினைவு கூரல்கள் மட்டுமல்ல, புலிகளின் அடையாளத்தை எந்த வகையில் எல்லாம் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தளவுக்கு அவற்றைப் பயன்படுத்தும் போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இதெல்லாம் போராளிகளையும் மாவீர்களின் குடும்பங்களையும் கவலையடையச் செய்யும் காரியங்கள். எனவேதான் இதைக் குறித்த விமர்சனங்களும் கண்டனக்குரல்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதையும் பாரதியின் வார்த்தைகளில் சொல்லலாம், “நடிப்புச் சுதேசிகள்” மீதான எதிர்ப்புக்குரல் என.

இந்த நிலையை மாற்றி, மாண்புறு வழியைத் தேர்வதென்றால், “ரௌத்திரம் பழகு” என்ற பாரதியின் சொல்லே வேதமாக வேண்டும். நிச்சயமாக நம் நெற்றிக் கண்ணைத் திறந்தே ஆக வேண்டும். அந்தச் சுடரில் விளக்கேற்றுவதே மாவீரைப் போற்று, சூரரைப்போற்று என்பதாக அமையும்.

# மாவீரர் துயிலும் இல்லங்கள்

**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்



மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.



# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?

இதுவரை காலமும் எமது புனித இலட்சியமானதமிழீழ இலட்சியத்துக் காக உயிர்த் தியாகம் செய்த போரா-ளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிக-ளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளி களின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறி வாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறி வாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரிய-ாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீ ரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழா வில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகு தியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI


# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேட நிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொருஇல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



"மாவீரர்

தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர்அவர்களுக்கெனஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.



## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும்சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள் ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

● எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது

● அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.



# இறந்தவர்களை நினைவு கூருகின்ற
# ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!

● கவல்கணன்

ஆஸ்திரேலியாவின் வட கோடியில், தற்போது நகரமாகியிருக்கும் டார்வினிலிருந்து சுமார் 400 கிலோ மீட்டர் தூரத்தில், தென் கிழக்கு திசை நோக்கிய ஒரு இடம் தான் வீமோல். அங்கே முறின்பத்தா என்ற மொழி பேசும் பூர்வீக குடிமகன் ஒருவன் வாழ்ந்து வந்த இடத்திற்கு அருகிலிருந்த ஆறு வற்றிப் போகிறது. அவனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது அவன் பொறுப்பு. அந்த ஆறு வற்றிப் போனதால் அவன் தயவில் வாழும் ஆறு பேருக்கும் உணவு தேடி அந்த இடத்தை விட்டுக் கிளம்புகிறான். ஒரு 'லொங்கூத்பார்' கிடைத்தால் அனைவருக்கும் நல்ல விருந்து போடலாம் என நினைத்து, காட்டுப் பக்கம் செல்கிறான். 'லொங்கூத்பார்'என்பது அவன்மொழியில் - எமக்குப் புரிய வேண்டுமென்றால் - கங்காரு.

வரட்சி காரணமாக, அவன் சென்ற இடமெங்கும் ஏமாற்றம்தான். வேட்டைக்குச் சென்ற அவனுக்கு முப்பதைத் தாண்டாத வயது. இருந்தாலும், அவனது உடல் சோர்வடையத் தொடங்கியது. உணவின்றி ஒரு மனிதன் முப்பது நாட்கள் உயிர் வாழலாம், ஆனால் நீரின்றி மூன்று நாட்களுக்குமேல்வாழமுடியாதாமே? அவனுக்கு அது தெரியுமா தெரியவில்லை. நாவறண்டு போகிறது. கொண்டுவந்த வளரியை ஒரு பக்கம் வைத்தான். ஒரு புதர் அருகில் சாய்ந்தான். அப்படியே உறங்கிப் போனான்.

அவன் வீட்டிலோ, பசியுடன் மனைவி. குழந்தைகள். வழமையாக வந்து போகும் உறவினர்களும் வரக்காணோம். எல்லோர் வீட்டிலும் அதே பிரச்சனைதான். வாய் விட்டு அழவேண்டும் போல் இருந்தது

**ஆஸ்திரேலியப்பூர்வீகமக்களிடையே இருந்த ஒரு பழக்கம் - யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம்.**

அவனது மனைவிக்கு. ஆனால், அவளே அழுதால், அவள் குழந்தைகளை யார் தேற்றுவது? மனம் மட்டுமல்ல, உடலும் சோர்ந்து போக அப்படியே அவளும் உறங்கிப் போனாள்.

தூங்கிக் கொண்டிருந்தவனை யாரோ கூர்ந்து பார்ப்பதைப் போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. மூடிய கண்களைத்திறக்காமலே, எங்கே இருக்கிறோம் என்பதை மீள நினைவு கூர்ந்தான். ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே இருந்த ஒரு பழக்கம் - யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம். ஆனால், இவனைக் கொல்வதற்கு யாரிடமும் எந்தக் காரணமும் இல்லை. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தால், அவன் எதிரே ஒரு லொங்கூத்பார். சற்றும் தயக்கமில்லாமல், ஒரு கையால் தனது வளரியைப் பற்றிக் கொண்டான், அவன் குடும்பத்திற்கு உணவாகப் போகிற லொங்கூத்பார் நோக்கி சட்டென விட்டெறிந்தான். விட்டெறிந்த வளரி அதன் மேல் மோதி, நேராய் நின்ற அந்த விலங்கை நெடுஞ்சாணாகப் படுக்க வைத்தது. அதனை நோக்கி ஓட நினைத்தவனுக்கு நெஞ்சை அடைத்தது. தொப்பென்று கீழே விழுந்தவனுக்கு மூச்சு நின்றுவிட்டது.

மாரடைப்பு!

அது ஒரு மரணம். இல்லை இரண்டு மரணங்கள். உணவு தேடி வந்தவனும், உணவாகிப் போக இருந்ததும் பலியாகி அந்த இடத்திலேயே இரண்டு மரணங்கள்.

அடுத்தநாள், அவனது இளைய சகோதரன், வேட்டைக்கு சென்ற தனது அண்ணன் ஏதாவது கொண்டு வந்திருக்கிறானா என்று பார்க்க அவனது குடும்பம் தங்கியிருக்கும் இடத்திற்குச் செல்கிறான். மூன்று நாட்களாக அவன் திரும்பவில்லை என்று அறிந்ததும், அவனது மூத்த மகனையும் அழைத்துக் கொண்டு அண்ணனை தேடி செல்கிறான். அவனது காலடித் தடயங்களை நான்கு கண்களும் கூர்மையாக அவதானித்துப் பயணித்து, அந்த மரணங்கள் நிகழ்ந்த இடத்தில் போய் நிற்கின்றன.


அவன் கடைசியாகப் பார்த்தது ஒரு கங்காரு. அதனால், அவனது ஆத்மாவும் கங்காருவாக மாறியிருக்கும் என்று மகனும் தம்பியும் முடிவெடுக்கிறார்கள். அந்த இடத்தை ஒருவன் காவல் செய்ய, மற்றவன் வீட்டாரிடம் சொல்வதற்காக ஓடிச் செல்கிறான்.

பசியால் கதறியழ முடியாமல் தவித்த அவன் மனைவி, ஓவென்று ஒப்பாரி செய்கிறாள்.

அயலவர், உறவினர் அனைவருமாக அவன் இறந்திருக்கும் இடம் நோக்கி ஊர்வலமாக செல்கின்றனர்.

இறந்த கங்காரு இப்போது அவர்களுக்கு இரையாக தயாராகிறது. இறந்தவன் உடல் மண்ணுக்கு இரையாக தயாராகிறது.

அவனது இரண்டு கால் பெருவிரல்களும் இணைத்துக் கட்டப்படுகின்றன. அவனது உடல் தரையில் படுக்கவைக்கப்பட்டு, அவன் கைகள் உடல் மேல் வைக்கப்படுகின்றன. அவனது மனைவி, அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அவனை எப்படி முதலில் சந்தித்தாள், அவன் அவளுக்கு என்னவெல்லாம் செய்து கொடுத்தான் என்று தனக்குள்ளும் மற்றவர்களுக்குக் கேட்கும்படியாகவும் குரலை ஏற்றியும் இறக்கியும் பாடுகிறாள்.





அவன் உடல் மேல் மண் தூவப்பட்டு, அதன் மேல் மரச்சுள்ளிகள் பரப்பப்படுகின்றன. அவர்களது இனக்குழுவின் பெரியவர் அவன் அருகே வந்து, அவன் எப்படி இறந்தான் என்று மூன்று முறை கேட்கிறார். யாரோ ஏதோ பதில் சொல்ல அதை இவரும் கேட்பது போல் கேட்கிறார். அவனது மனைவி மற்றும் அவனுக்கு சொந்தமான பொருட்கள் யாரிடம் செல்ல வேண்டும் எனக் கேட்கிறார்.

(IX ஆம் பக்கம் பார்க்க)

# இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!




**பூர்வீக மக்களின் வாழ்க்கைக் குத் துணைபோகும் இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத் தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடி யேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனித இடங்களா கக் கருதப்படுகின்றன.**

**ஆஸ்திரேலிய மண்ணில் மட்டு மல்ல, காலனித்துவ ஆட்சி நடை பெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீக மக்கள் வஞ்சிக்கப்பட்டுள் ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவ ஆட்சி நடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ் வாறு வஞ்சிக்கப்படுள்ளன.**

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி உட்பட, அவை அனைத்தும் அவனது இரண்டாவது சகோதரனிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று அவரே பகிரங்கமாக அறிவிக்கிறார். ஒப்பாரியும் முணுமுணுப்புகளும் தொடர்கின்றன.

அப்போது, ஒரு கூரான கல்லை எடுத்து அவன் மனைவி தன் தலையிலுள்ள நீண்ட முடிகளைவெட்டிக்கொள்கிறாள். செம்மண்ணைக் கையிலெடுத்து தன் முகத்திலும், தலையிலும் பூசிக்கொள்கிறாள். அவன் மனைவியும், வேறு பெண்கள் சிலரும் அவனது உடலை சுற்றி வலம் வந்தபடியே ஒப்பாரி போல் பாடியவண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் கைகளில் இரண்டு தடித்த சிறு கோல்கள். அவற்றைத் தாளத்துடன் தட்டியபடியே அவன் உடலை சுற்றி வருகிறார்கள். அவனது இரண்டாவது சகோதரன், கங்காருவைப் போல நடமாடுகிறான்.

பசியாக இருந்த அனைவரும் பரிமாறப்பட்ட கங்காருவை ஒரு வழி செய்து விடுகிறார்கள். மீதம் ஏதுமில்லை.

இரண்டு காலங்கள் மாறி, மழை மீண்டும் வரும் வரைக்கும் இவன் பெயரை யாரும் சொல்லக்கூடாது, அப்படி சொன்னால் இறந்தவன் ஆத்மா அந்த இடத்திலேயே சுற்றித்திரியும் என்று அந்தப் பெரியவர் கூறி, ஏற்கனவே கொண்டுவரப்பட்ட ஒரு கல்லை சுட்டிக்காட்டி, அவனது மூத்த மகனை அழைக்கிறார். அவனைக் கொண்டு, இறந்தவன் தலைப்பகுதியில், செங்குத்தாக அந்தக் கல்லை நட வைக்கிறார்.

அவன்மனைவி, அவன்குழந்தைகள்மட்டுமல்ல, அவன் நண்பர்களும் ஏதாவது காரியத்தை புதிதாக செய்ய ஆரம்பிக்கு முன்னர், அந்த 'நடுகல்' இருக்கும் இடத்திற்கு வந்து, ஆசி பெற்றுச்செல்வார்கள்.

இந்தப் பழக்கம் ஆஸ்திரேலிய பூர்வீக மக்கள் பலரிடம் காணப்பட்டதை அவர்களது வாய் வழி கதைகள் மட்டுமல்ல, பூர்வீக மக்களின் வாழ்க்கையை ஆவணப்படுத்திய ஆங்கிலேயர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

இந்த சம்பவம் நடந்து மூன்று நான்கு தலைமுறைகள் கடந்திருந்தாலும், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு இந்தக் கதை சந்ததி சந்ததியாக சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களைப்போல அல்லாது, உள் நாட்டில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தங்கள் கலாச்சார விழுமியங்களை ஓரளவு தக்க வைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கிறது.

'அனைத்தும் மற்றையதுடன் தொடர்புடையது' - என்பது பூர்வீக மக்களின் நம்பிக்கைகளின் ஒன்று. நாம் காணும் உலகம், நாம் உணரும் உலகம், எமது கண்களுக்குத் தெரியும் உயிரினங்கள், சடப்பொருட்கள் எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையகவே இருக்கின்றன. இந்த தொடர்புகளை சந்ததி சந்ததியாக எடுத்துச் சொல்வதற்குத்தான் கதைகள், ஓவியங்கள், சடங்குகள் என்பவற்றையும் பூர்வீக மக்கள், குழப்பங்களில் ஒழுங்கையும், ஒழுங்கில் நிலையாண்மை



மற்றும் தாக்குப்பிடித்தல் என்பவற்றையும் கண்டு, வாழ்வுக்கான சட்டங்களைத் தீட்டினார்கள்.

இப்படியான தொடர்புகளை அவர்கள் உணர்ந்திருந்தாலும் மற்றைய சமூகங்களில் வளர்ந்திருப்பது போல ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றுதான் இறந்தவர்களை வழிபடவேண்டும் என்பது அவர்களது முறையல்ல. அவர்கள் தங்கள் முன்னோர்களை வணங்கினார்கள். அந்த வழிபாட்டிற்கு என்று சிறப்பாக ஒரு கட்டிடம் இல்லாவிட்டாலும், முன்னர் குறிப்பிட்ட நடுகற்களை வணக்கத்திற்குரிய இடங்களாக அவர்களுக்கு இருந்திருக்கின்றன. ஐரோப்பியர்கள், குறிப்பாகப் பிரித்தானியர்கள் அந்த வழிபாட்டு முறையை முற்றாக அழிப்பதற்கு முயற்சிகள் செய்துள்ளார்கள்.

இதேவேளை, சில இடங்கள் புனித இடங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ஆஸ்திரேலிய சின்னமாகியுள்ள உளுறு மலை.

பொதுவாகப் பார்த்தால், பூர்வீக மக்களின் வாழ்க்கைக்குத் துணைபோகும் இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத்தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடியேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனித இடங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றில் மக்கள் ஒன்று கூடி சடங்குகளை நிகழ்த்துவதுதான், மற்றைய சமூகத்தினரின் வழிபாட்டு முறையுடன் ஒப்பிடக்கூடியது.

பூர்வீக மக்களின் இன்னொரு நம்பிக்கை, அவர்கள் வாழும் நிலத்தின்மேல், அவர்கள் உரிமை கொள்ளமுடியாது என்பதாகும். ஆனால், இது குறித்த புரிந்துணர்வே இல்லாத பிரித்தானியர்கள் இந்த பூர்வீக மக்கள் வாழும் நாட்டில் காலடி வைத்தால் என்னவாகும் என்பதை சரித்திரம் நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது.

ஆஸ்திரேலிய மண்ணில் மட்டுமல்ல, காலனித்துவ ஆட்சி நடைபெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீக மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவ ஆட்சி நடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ்வாறு வஞ்சிக்கப்படுள்ளன.

ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே காணப்பட்ட நடுகல் வழிபாடு, தமிழர்களிடையேயும் பரவலாக இருந்திருக்கிறது.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை,

முன்நின்று கல்நின் றவர்" - என்ற திருக்குறள் மட்டுமின்றி சங்க இலக்கியத்தின் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் பரந்து காணப்படும் பாடல்களில் நடுகல் வழிபாடு குறித்து கூறப்பட்டிருக்கின்றன.

அந்தவகையில், தமிழர் நிலத்தில் உரிமைகள் பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து நின்று மாய்ந்தவர்கள் விதைக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட நடுகற்கள் இந்த கார்த்திகை மாதத்தில் நினைவு கூரப்படுகிறது. அவர்களது நினைவாக அமைக்கப்பட்ட நடுகற்கள் வேண்டுமென்றே பல இடங்களில் தகர்த்தெறியப்பட்டாலும் நினைவுகளில் எரிகின்ற அணையா சுடராக அவர்கள் வழிபடப்படுகிறார்கள்.



# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



"பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே"

"இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது"

**- 1989**

"இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்"

**- 1990**

"நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாக-வோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்"

**- 1991**

"எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்"

**- 1992**

"எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது"

**- 1993**

"சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்"

**- 1994**

"யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது"

**- 1995**

"மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை"

**- 1996**

"மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்"

**- 1997**

"எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப் போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது"

**- 1998**

"போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது"

**- 1999**

"எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்" **- 2000**

"விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்"

**- 2001**

"தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன"

**- 2002**

"எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன"

**- 2003**

"சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை"

**-2004**

"சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனை-கதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்"

**-2005**

"சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடு-களையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்"

**-2006**

"எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமா-கத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்"

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" **-2008**



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம் அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் "தகனம் செய்வது" தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே பெரிய வேறுபாடில்லை

அறுவடை முடித்த வயல்கள்
வெறிச்சோடின
ஒரு சிறங்கை மணிகூடக் கிட்டவில்லை
நமக்கு.

காற்று அடித்ததுதான்
எடுத்துத் தூற்றவில்லையே எம் நெற்சூடு.

மழை பெய்தது
எம் தாமரைக்குளத்துக்கு மட்டும்
தண்ணீர் வரவில்லை.

வெளி வீதி சுற்றி
காவடி தோளிருந்து இறங்கும்
நேரம் வந்தாச்சா?

வலிக்கிறது தோள்மூட்டு
வரமேதும் கிட்டவில்லையே நமக்கு.

ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை
இளிச்சவாயர் ஆனோமா?

பூ மலரும் வடிவு பார்க்க
வாசலிருந்தோம் நம்பிக்கையுடன்.

பூவும் மலரவில்லை
பூ மரத்தின் வேரும் தெரியவில்லை.

நிலவு பார்க்கும் ஆசையில்
இரவெல்லாம் விழித்திருந்தோம்.

நிலவையும் காணவில்லை
விழித்திருந்த இரவையும் காணவில்லை.

பத்து நாள் அலங்காரத்திருவிழா
முற்றுப்பெறுகின்றது.
எஞ்சியிருப்பது கொடியிறக்கம் மட்டுமே.

சிகரங்கள் இறங்குகின்றன.
சின்னமேளங்கள் போய்விட்டன.
தவில்காரரும் புறப்படுகின்றனர்.

காப்புக்கடைகளைக் கலைத்து
கட்டத்தொடங்கியாயிற்று.
சில கடலைக்காரரே மீதி.

இனி அவர்களும் போய்விடுவார்கள்.

எல்லோரும் போகலாம்.
கோவில் வீதிக்குடியிருப்பாளர்கள்
எங்கே போவது?

ஜிகினா வெளிச்சத்தில் குதித்த
அலுப்புத்தீர
ஒரு பகல் உறங்கலாம்
அதன்பிறகு என்ன?

வேள்வி நடத்த கோயிலில்
அலங்கார உற்சவத்துக்கு ஆசைப்பட்டோம்
நடந்தது என்ன?

கூத்து நடந்தது பார்த்துப்
பரவசமடைந்தோம்.
இப்போ கூத்தும் முடிந்துவிட்டது.
எந்த வாழ்வும் கிட்டவில்லயே எமக்கு.

எங்கேனும் சின்னக்கிளைகளில்
அரும்பு கட்டத்தொடங்கினால் போதுமே
ஆதிக்க மாடுகள் அதனை
மேய்ந்துவிடுகின்றன.

அழகிய ஜீவிதத்திற்காக
சின்னக் கூடு கட்டுவோமென
சிட்டுக்குருவிகள் சுள்ளி பொறுக்கினாற்கூட
பருந்துகள் பொறுத்துக்கொள்வதில்லை.
குருவிகளை அடித்து வாயிற் போடுகின்றன.

நம் வயலின் விதைப்புக்கு நாமுழுதாற்கூட
அண்டை வயற்காரன் சண்டைக்கு
வருகின்றான்.

ஈழத்தமிழருக்கு
இது எழுதிவைத்த விதியாச்சு.

எட்டு மூலைப்பட்டம் கட்டி
இரவிலேற்றினோம்.
விடியும்வரை விண்சத்தம் கேட்டது.
பட்டத்தைத்தான் எவரும் பார்க்க
முடியவில்லை.

சப்த நதிகளும் கூடி

அட்ட திக்கு யானைகளும் கூடி
ஊரையடித்து உலையிற்போடும்
பகாசுரர்களும் கூடி
எமக்கு பந்தி பரிமாற வந்தனர்.
பாயாசம் என்றனர்.

வாழையிலை விரித்து வரிசையிலிருந்தோம்
என்ன விழுந்தது இலையில்?

ஆக்கித் தந்ததும் ஒன்றுமில்லை.
தூக்குச் சட்டியிலும் ஒன்றுமில்லை.

மின்சாரம் வந்தது,
எரிசாராயம் வந்தது,
டயலொக் வந்தது,
மொபிற்றல் வந்தது,
அங்கர் பட்டரும்
மக்கி நூடில்சும் வந்தது,

பிதாமகன் வந்தான்,

போய்சும் வந்தார்கள்
எமக்கான விடுதலைதான் வரவில்லை.

வீதியெங்கும் விளம்பரப் பலகையும்
காதிலெங்கும் சமாதானப் பாடலுமாய்
விளங்குகின்றன நம் ஊர்கள்.

ஈழத்தமிழனே!
பட்டும் பட்டும் உனக்கேனடா புத்தி
வரவில்லை.

ஒன்றில் போராடு
இல்லையேல் சரணாகதி அடைந்துவிடு.
இரண்டுக்குமிடையில் நின்று
நசிந்து விடாதே.

உன் தாகத்துக்கு நிறைவான தண்ணீரை
எவரும் தரமாட்டார்கள்.
வாய் நனைக்க மட்டுமே வார்ப்பார்கள்.
நீ சொண்டைத்தான் நக்க வேண்டி வரும்.

பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே
பெரிய வேறுபாடுகளில்லை
ஒன்று கடிக்கும்
மற்றது அடிக்கும்.

எதிரே வருபவன் பலவானென்றால்
இரண்டுமே ஒன்றாகிவிடும்.

எரிகிற கூரையில் கொள்ளியெடுத்து
சுருட்டுப் பற்றவைத்தானாம்
கிழவனொருவன்.
பக்கத்து வீட்டுக்காரனின் கதைதான்.
எமக்குப் பழைய கதையாச்சே.

உலகெங்கும் டெங்குக் காய்ச்சலாம்
அவரொருவர் நுளம்புநாசினி விசுறுகின்றார்.

இறுதியில் நுளம்பு இங்குதானென்று
மகாபிரபு மருந்துடனும் வரலாம்..

வருபவர்கள் எல்லோரும் வரட்டும்.
முதலில் நீ முதுகிற் கூனலில்லாமல்
முற்றத்தில் நில்

உடுக்கடித்து ஆடப் பழகு.
தலையில் தலைப்பாகை கட்டு.
நறுக்குத் தெறித்தாற் போல
உன் வாயிலிருந்து வார்த்தைகள் வரட்டும்.

நீ திரும்பினால்
திசைகளும் உன்னோடு திரும்பட்டும்.

நீ பாடினால்
பட்ட மரத்திற்கூடப் பால் தெறிக்கட்டும்.

மழையுன் தோளின் கீழேயே
பெய்யும்படியாய்
தலையை முகிலுக்கு மேலே வைத்திரு.

இத்தனைபேரையும் குழியில் விதைத்தது
தேர்தலில் நிற்க அல்ல.

தெருக்களைச் செப்பனிட அல்ல.
மாகாண சபையின் நிர்வாகமெடுத்து
மதவு கட்ட அல்ல.

வேண்டும் எமக்கு கூண்டில்லா வாழ்வு.
வேண்டும் எமக்கு விடுதலைக்கான சிறகு.

**– புதுவை இரத்தினதுரை**



# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சேவைக்கட்டணம் இல்லை
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்



வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478

நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின்
மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com





# நாடு முழுவதும் மரண பயம் சர்வம் சவேந்திர சில்வா மயம்

● காவலன்

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிவாகைசூடி அரியணையேறும் பட்சத்தில், இலங்கையானது இராணுவ மயமாக்கலை நோக்கியே பயணிக்கும் என உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் அபாயச்சங்கு ஊதப்பட்டது. அதேபோல் சிங்கள, பௌத்த பேரினவாதமும் தலைவிரித்தாடும் என எச்சரிக்கை சமிக்ஞைகள் விடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி 24 மணி நேரத்துக்குள் மேற்படி எதிர்வுகூறல்கள் - எச்சரிக்கைகள் யாவும் மெய்தான் என்பதை உறுதிப்படுத்தும்விதத்தில் அறிவிப்புகளை விடுத்தார் கோட்டாபய ராஜபக்ச. சிங்கள, பௌத்த வாக்குகளாலேயே தனது வெற்றி சாத்தியமானது என கர்ஜித்த அவர், பதவியேற்ற கையோடு முக்கிய பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை அதிரடியாக நியமித்தார்.

அமைச்சுகளின் செயலாளர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரச திணைக்களப் பணிப்பாளர்கள் என அரச நிர்வாக பொறிமுறைக்குள் இராணுவ அதிகாரிகள் ஊடுருவினர். நாட்டில் அரசியலமைப்பும் அதிஉயர் சபையான நாடாளுமன்றமும் இருக்கையில், பௌத்த தேரர்களை மாதாந்தம் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவர்களுடன் கலந்துரையாடியே முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இதனால், நாட்டை இனி ஆளப்போவது சட்ட சபையா அல்லது சங்க சபையா என்ற வாதமும் மேலோங்கியது.

இராணுவத்தில் ஒரு படைப்பிரிவை வழிநடத்துவதற்கு பயன்படுத்தப்படும் சில முகாமைத்துவ நுட்பங்களை, ஜனநாயகக் கட்டமைப்பில் மெல்லென விதைப்பதற்கு ஜனாதிபதி தீவிரம் காட்டினார். இவ்வாறு படையினரையும் தேரர்களையும் இரு கண்களாகக்கருதி கோட்டாபய ராஜபக்ச பயணித்துக்கொண்டிருக்கையில்தான் இலங்கையையும் தாக்கியது கொரோனா.

### கொரோனா அலையும் போர் மேகமும்

கொரோனா வைரஸின் தாயகமான சீனாவில் கடந்த டிசம்பரில் வைரஸ் வேகமாக பரவியது. அதன்பின்னர், ஐரோப்பிய நாடுகளை ஆட்டம் காண வைத்தது. அமெரிக்காவிலும் ஊழித்தாண்டவத்தை தொடர்ந்தது. இது சுகாதார அச்சுறுத்தல் என்பதால் பலம்பொருந்திய இராணுவக் கட்டமைப்புகள் இருந்தும், சுகாதார அதிகாரிகளையே மேற்படி நாடுகள் முன்களப் பணியாளர்களாக களமிறங்கின. துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரமே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஆனால், இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது அலை ஏற்பட்டபோதே படையினர் களமிறக்கப்பட்டனர். புலனாய்வாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். சுகாதார துறையினரைவிடவும் பாதுகாப்பு தரப்பினருக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அதாவது, போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக அன்று கையாளப்பட்ட இராணுவ நடைமுறைகள், அதே மனோபாவத்துடன் கொரோனா வைரஸ் விவகாரத்திலும் கையாளப்பட்டன. படையினரும் போர்காலத்தின்போன்றே செயற்பட்டனர்.

அதுமட்டுமல்ல, யுத்தகாலத்தை ஒப்பிட்டுதான் மக்களுக்கும் அறிவுரைகள் - ஆலோசனைகள் வழங்கப்பட்டன. “அருகில் வருபவர்கள் தற்கொலை குண்டுதாரிகளாகவே கருதவேண்டும், விலகி இருக்கவேண்டும், விழிப்பாக இருக்கவேண்டும்” - என்றெல்லாம் கூறப்பட்டது.

போர்காலத்தில், தேசிய அடையாள அட்டை எவ்வளவு முக்கியத்துவம்மிக்கதாக இருந்ததோ, அதேபோல் ஊரடங்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டு அதிலும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. சிறுபான்மையின மக்கள் வாழும் பகுதிகளில் சட்டம் தனக்கே உரிய கம்பீரமான பாணியிலும் ஏனையப் பகுதிகளில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயற்பட்டதையும் காணமுடிந்தது. மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டு, சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டன. ரோந்து நடவடிக்கைகளும் இடம்பெற்றன. இதனால் மக்களுக்கும் போர்காலம் மனத்திரை, விழித்திரைகளுக்கு முன்னால் வந்துசென்றது.

நிலைமை இப்படிஇருக்க தொடர் முடக்கம், இலங்கையின் பூகோள அமைவிடம் ஆகிய காரணங்களால் முதலாவது அலை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

உள்நாட்டுப்போர் இறுதிக்கட்டத்தை எட்டிய தருவாயில், தெற்கில் முன்கூட்டியே வெற்றிப்பிரகடனத்தை வெளியிட்டதுபோல, ஐ.நா. மாநாட்டில் பங்கேற்று கொரோனாவை கட்டுப்படுத்திவிட்டோம் என்ற அறிவிப்பை ஜனாதிபதி கோட்டா விடுத்தார். மறுபுறத்தில் சுகாதார அமைச்சரால் சுற்றுலாப் பயணிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. “இராணுவத்தினரை ஈடுபடுத்தியதாலேயே வெற்றி உறுதியானது” - என சூளுரைக்கப்பட்டது. “உலக நாடுகளுடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளப்போகின்றோம்” - என தம் பட்டமும் அடிக்கப்பட்டது. அதனை காட்டியே பொதுத்தேர்தலில் வெற்றிக்கனியும் ருசிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி, பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை - என மக்களின் பேராதரவு கிடைத்துவிட்டதால் 20 ஐயும் தன்னிச்சையாக நிறைவேற்றிக்கொண்டு, இனி எவ்வித தடையுமின்றி முன்னோக்கி பயணித்துவிடலாம் என கோட்டா அரசு திட்டமிட்டுக்கொண்டிருக்கையில்தான், திடீரென இலங்கையில் கொரோனா 2ஆவது தலைதூக்கியது. அது தற்போது வேகமாக பரவி பலி எண்ணிக்கையையும் அதிகரிக்க வைத்துள்ளது. மக்களின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

முதல் அலையை கட்டுப்படுத்தியபோது ‘நான்’ என உரிமைகோரிய ஜனாதிபதி, தற்போது 2ஆம் அலையால் தலையிடி என்றதும் ‘அவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்’ என மக்களை நோக்கி கை நீட்டுவது அரசியலில் எந்த டிசைனை சாரும் என தெரியவில்லை.

(23ஆம் பக்கம் பார்க்க)

# நாடு முழுவதும் மரண பயம் சர்வம் சவேந்திர சில்வா மயம்

**(22ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கோட்டாவின் இந்த அறிவிப்பை கடுமையாக சாடி, முகநூலில் பதிவொன்றை பதிவிட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, “இப்படியானவர் தலைவன் கிடையாது” எனவும் விளாசியிருந்தார்.

**சர்வம் சவேந்திர சில்வா மயம்**

கொரோனா வைரஸ் ஒரு புறத்தில் கோரத்தாண்டவமாடினாலும் அதனை வைத்து மறுபுறத்தில், அரசியல் தேவைகளும் இலங்கையில் இனிதே நிறைவேற்றப்பட்டுவருகின்றன என்பது கசப்பான உண்மையாகும். அதேபோல், போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளான இராணுவத்தளபதிக்கு வெள்ளையடிப்பு செய்யும் வியூகமும் வெளிப்படையாகவே இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக, கொரோனா வைரஸ் தொடர்பில் சகல விதமான அறிவிப்புகளையும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வெளியிட்டுவருகின்றார்.

தேசியப்பாதுகாப்பு என்பதற்குள்தான் இராணுவப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் வருகின்றன. அதற்காக, சுகாதார பாதுகாப்பு சார்ந்த விடயங்களை இராணுவம் கையாளமுடியாது. கொத்தணிக்குண்டுகள்மூலம் கொரோனா என்ற கொடிய வைரஸை கட்டுக்குள் கொண்டுவர இயலாது. அதற்காகத்தான் சுகாதார பிரிவு இருக்கின்றது. அப்பிரிவிலும் ஒவ்வொரு துறைகளுக்கும் பொறுப்பானர்கள் - நிபுணர்கள் இருக்கின்றனர்.எனவே, அவர்கள் ஊடாக நாட்டு மக்களுக்கான அறிவுறுத்தல்களை, அறிவிப்புகளை விடுப்பதே ஏற்புடைய - பொருத்தமான - விஞ்ஞானப்பூர்வமான நகர்வாக - நடவடிக்கையாக அமையும். உலக நாடுகள் அனைத்திலும் இந்த நடைமுறையே பின்பற்றப்படுகின்றது.

ஆனால், வைரஸின் வீரியம், பிரிஆர் பரிசோதனை, தனிமைப்படுத்தல் பொறிமுறை உட்பட சுகாதாரதுறைசார் தகவல்களையும் இலங்கையில் இராணுவத்தளபதி வெளியிட்டுவருவதை காண - கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இடையிடையேதான் “நான் வைத்தியர் அல்ல” - என்ற சமாளிப்பு வார்த்தையை பயன்படுத்தும் அவர், அவ்வப்போது அரசியலும் பேசிவிட்டு எவ்வித நெருக்கடியுமின்றி செல்கின்றார்.

கொரோனா வைரஸ் தடுப்பு செயலணியின் பிரதானி என்ற வகையில் அவர் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கருத்து வெளியிடலாம், அதற்கான உரிமை அவருக்கு உண்டு என்று சிலர் விதண்டாவாதங்களை முன்வைக்கலாம். ஆனால், குறித்த செயலணியில் அனைத்து துறைசார் நிபுணர்களும் இருக்கின்றனர். எனவே, துறைசார் விடயங்களை நிபுணர்கள் வெளியிடுவதே சிறப்பு. அப்படி இல்லையென்றால் தனி ஒருவனாக சவேந்திர சில்வாவே அந்த செயலணியில் இருந்துவிட்டு போகலாம் அல்லவா?

அதுமட்டுமல்ல, நாட்டில் சிறப்பான அரசியல் தலைமைத்துவம் இருக்கின்றது என ஆட்சியாளர்களுக்கு வக்காலத்து வாங்குவதுடன், எதிர்க்கட்சிகளின் அரசியல் ரீதியிலான விமர்சனங்களுக்கும் அவர் பதிலளித்துவருகிறார். இராணுவத்தளபதிக்கு அரசியல் பேசும் அதிகாரத்தை வழங்கியது யார்?

‘கோட்டா பெயில்’ என்ற தொனியில் எதிரணி உறுப்பினர்கள் தற்போது பிரச்சாரம் முன்னெடுத்துவரும் நிலையில், அவர் பெயில் இல்லை என்ற தொனியில் இராணுவத்தளபதி பிரச்சாரம் முன்னெடுப்பது பதவிநிலைக்கு அழகல்ல.

கொரோனா வைரஸ் தொடர்பான உண்மையான தகவல்களை உள்ளவாறே மக்களுக்கு வழங்கிய அரச மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் ஜயருவன் பண்டாரவை பதவியிறக்கம் செய்த சுகாதார அமைச்சு, அதற்கு எதிர்ப்புகள் வலுத்ததால் ஜயருவன் பண்டாரவுக்கு சுகாதார அமைச்சின் பேச்சாளர் பதவியை வழங்கியது. அந்த பதவியும் திடீரென பறிக்கப்பட்டுள்ளது. அதாவது, சுகாதார துறையில் உள்ள ஒருவருக்கு விடயதானத்துடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படையாக கூறுவதற்குக்கூட சுதந்திரம் இல்லாதபோது, சவேந்திர சில்வாவால் மட்டும் எப்படி சகல விடயங்களையும் பேசக்ககூடியதாக இருக்கின்றது?

சுகாதார சேவைகள் பணிப்பாளராக இருந்த விசேட வைத்தியர் அனில் ஜயசிங்கவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகிவந்த நிலையில், பதவி உயர்வு என்ற போர்வையில் அவர் சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். சுகாதாரத்துறையில் தேர்ச்சி பெற்ற அவருக்கு, சுகாதார அமைச்சின் செயலாளர் பதவியை ஏன் வழங்கமுடியாமல்போனது? இராணுவ அதிகாரி ஒருவரை செயலாளராக்கவேண்டும் என்பதாலேயே இறுதியில் அனில் ஜயசிங்க பலிகடாவாக்கப்பட்டார்.

எனவே, கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின் பின்னால் அரசியல் இருப்பது இதன்மூலம் உறுதியாகும் நிலையில், வெள்ளையடிப்பு செய்யும் திட்டமும் இருக்கின்றது.

இறுதிக்கபட்டப்போரின்போது, இராணுவப் படைபிரிவான்றின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட சவேந்திர சில்வாவுக்கு எதிராக பங்கரமான போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவருக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் அமெரிக்கா வருவதற்கு அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ராஜபக்சக்களின் அழுத்ததால் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத்தளபதி பதவியை மைத்திரி வழங்கினார். சவேந்திர சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்திவந்த நிலையில், அவருக்கு உயர்பதவி வழங்க்கப்பட்டமை கடும் விமர்சனத்துள்ளானது. எனவேதான், சவேந்திர சில்வா நல்லவர், வல்லவர், புனிதர் என காண்பித்து வெள்ளையடிப்பு செய்து போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்கு கோட்டா அரசாங்கம் முயற்சிக்கின்றது. ராஜபக்சக்களின் விசுவாசி என்பதாலேயே சவேந்திர சில்வாவுக்கு அத்தனை ‘கவனிப்புகள்’.

அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் மைக் பொம்பியோ இலங்கை வந்திருந்தபோதுகூட சவேந்திர சில்வா விவகாரம் பற்றி பேசப்பட்டது. அவருக்கான பயணத்தடையை மீள்பரீசிலனை செய்யுமாறு இலங்கை அரசின் சார்பில் கோரப்பட்டது. எனினும், மைக் பொம்பியோ உறுதியான பதில்கள் எதனையும் வழங்கவில்லை.

ஆக, இலங்கையில் தற்போது சர்வபலம் படைத்த நபராகவே சவேந்திர சில்வா காணப்படுகின்றார். இராணுவ தளபதி என்பதால் அவரின் செயற்பாடுகளை எதிரணிகூட விமர்சிப்பதில்லை. இராணுவ அதிகாரியை விமர்சித்தால் அது சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தால் எதிரணி உறுப்பினர்கள் மௌனம் காக்கின்றனர்.

**ட்ரோன் கண்காணிப்பு**

அதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான ஒத்திகையையும் அரசாங்கம் வெற்றிகரமாக நடத்திவருகின்றது. அதன் ஓர் அங்கமே புதியா “ட்ரோன்” கமரா கண்காணிப்பு.

உயர் பாதுகாப்பு வலயம், வனப்பிராந்தியம், ஆள்நடமாட்டமில்லா பகுதி ஆகியவற்றை கண்காணிப்பதற்கு ட்ரோன் கமராக்கள் பயன்படுத்தப்படுவதை நியாயப்படுத்தலாம், ஆனால், மக்கள் குடியிருக்கும் பகுதிகளை கண்காணிப்பதற்கு இந்த நடைமுறையை பின்பற்றுவது மனித குலத்துக்கு எதிரான செயற்பாடு என்றே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


சீசீரிவி கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தால்கூட, இங்கு கமராக்கள் இருக்கின்றன என்ற அறிவித்தல் ஒட்டப்படவேண்டும். தனிமனித சுதந்திரம் என்ற அடிப்படை மனித உரிமையினுள் அத்துமீறிப்பிரவேசிப்பதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்ற அடிப்படைவிதி இது.

நிலைமை இப்படி இருக்கையில், “மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு ட்ரோன்களை பறக்கவிட்டு, கண்காணிப்பது நியாயமா” - என சமூகசெயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கொழும்பு போன்ற பகுதிகளில் - குறுகிய இடங்களில் - நிறையப்பேர் வாழ்கின்றனர், பொதுவெளியில் குளிக்கும் கிணறுகள் உள்ளன, எனவே, இவ்வாறான செயற்பாடு மனித உரிமை மீறலாகவே அமைந்துள்ளது. சிலவேளை, வேறு எவராவது இவ்வாறு ட்ரோன்களை பறக்கவிட்டு தவறான நோக்கத்துக்கு தகவல்களை திரட்டினால் நிலைமை என்னவாகும், மக்களுக்கு பாதுகாப்பாக - சுதந்திரமாக வாழும் உரிமை இருக்கின்றது. அதனை உறுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதே பாதுகாப்பு தரப்பின் பிரதான பொறுப்பாகும். அதனை செய்யாமல் மக்களின் சுதந்திரத்துக்கு சவால் விடுக்கும் வகையில் செயற்பட முற்பட்டால் அது என்றோ ஒரு நாள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். ■


## நகர சபையின் இலவச சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் திட்டத்தில் முன்பதிவு செய்தல்

மீண்டும் பயன்படுத்தவோ அல்லது மறுசுழற்சி செய்யவோ முடியாத தேவையற்ற பாரிய வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களை அகற்றிக்கொள்வதற்காக நகர சபையின் இலவச சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் திட்டத்தில் முன்பதிவு செய்யுங்கள்.




முன்பதிவுகள் அவசியமானவையாகும்.

சேகரிப்பு குவியலின் அளவானது 2 கன மீற்றருக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

முன்பதிவு செய்தவுடன், சேகரிப்பு திகதிக்கு முன்னைய இரவில் பொருட்களை உரிய இடத்தில் வைக்கவும்.

தயவுசெய்து இரண்டு வாரங்களுக்கு முன்பே முன்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

முன்பதிவுகளை மேற்கொள்வதற்கு அல்லது மேலும் தகவல்களை அறிந்துகொள்வதற்கு
8757 9000
www.cumberland.nsw.gov.au

CUMBERLAND CITY COUNCIL

ஊழிக்காலம்-2

17



# புயலுக்குப்பின்...

மறுநாள் காலை உணவை யாரும் தொடவில்லை. எல்லோரும் அவரவர் இடங்களில் உட்கார்ந்திருந்தனர். செய்தி அலுவலகத்துக்குப் போனது. பொறுப்பிலிருந்த கப்டனானவள் இவர்களிடம் வந்து -“ஏன் சாப்பிடேல்ல” - என்று கேட்டாள்.

“ எங்களுக்கு சாப்பாடு வேண்டாம், எங்களுக்கு போதிய தண்ணீர் வேண்டும்” - என்று ஆளாளுக்கு கோஷமாகக் கத்த,அந்த சிங்களப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை.

இவர்கள் எல்லோரும் என்னை எதிர்த்துப் பேசுகிறார்கள் என்பது மட்டுமே அவளுக்குப்புரிந்தது. அவள் தன் ஆட்காட்டி விரலைமட்டும் நீட்டி கையை உயர்த்தி -

“மூடுங்க வாய, ஒராள் மட்டும் பேசு” - என்றாள்.

தம்மை இவள் கைநீட்டி எச்சரிக்கிறாள் என எண்ணி, சிலர் எழுந்து நின்று கூச்சல் போடத் தொடங்கினர். உடனே, அவள் அம்மண்டபத்தை விட்டு விரைந்து வெளியேறினாள். இவர்களுக்கும் அவளுடைய மொழி புரியவில்லை அவளுக்கும் இவர்களுடைய மொழி புரியவில்லை.

உடனடியாக, அங்கிருந்த பொலிஸ் வரவழைக்கப்பட்டதுடன் மேலதிக இராணுவமும் வந்தது. இதெல்லாம் நடந்தது “பி” புளொக்கில். ஏனைய புளொக்குகளில் இது எதுவும் தெரியாமல், பெண்கள் அமைதியாக தம் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

“பி”புளொக் பெண்கள் வெளியே வந்து அமர்ந்தனர். இவர்களைத் தூண்டி விட்டவர்களோ உள்ளேயே இருந்து விட்டனர்.

சற்று நேரத்தில் வந்த பொலிஸ்படை, கேட்டுக்கேள்வி எதுவுமில்லாமல், தமது பார்வையில் பட்ட சிலரை இழுத்து ஜீப்பில் ஏற்றினர். ஏனைய பெண்களில் கணிசமானவர்கள் கப்டன் லக்மாலியின் அலுவலகத்தை அண்டியிருந்த அறையில் கொண்டுசென்று அடைக்கப்பட்டனர். அடைக்கப்பட்டவர்களில் பலர் ஏதுமறியாதமவர்கள்.

பொலிஸினால் ஜீப்பில் ஏற்றப்பட்ட ஆறு பெண்களும் நீதவான் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்கவேண்டிய கட்டளையை அவர் வழங்கவேண்டும்.அவர் அந்தப் பெண்கள்மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டைப் படித்தபின்.

“இது சரியாம்மா..? நீங்கள் இப்ப இருக்கிற நிலைமைய யோசிக்கிறதில்லையா”

“ஏன் சேர், எங்களுக்குத் தண்ணி, நல்ல உணவு, மரியாதை - இதைத்தானே கேட்டம்” “அப்படியா? அந்த கப்டனை தாறுமாறாக ஏசி அடிக்கப்போனதாக புகார் எழுதியிருக்கிறாங்களே” - என்றார்.

“நாங்கள் மரியாதையாத்தான் கதைச்சம், அவதான் அடிக்கிறமாதிரி வந்தா” “என்ன பேசினவ” “என்ன பேசினாவோ யாருக்கு தெரியும்? எங்களுக்குத்தான் சிங்களம் தெரியாதே” “ம்... அவவுக்கும் தமிழ் தெரியாது. ரெண்டு தரப்பும் சத்தமா பேசியிருக்கிறியள்“ம்... அவ பேசினா,நாங்க விடுவமா” நீதவான் புன்னகைத்தார்.

“அவயளின்ர குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொண்டால், நீங்கள் சிறைக்குத்தான் போவீங்கள் தெரியுமா?” “பரவாயில்லை, அனுப்புங்கோ. நாங்க போறம்” “ம்... நான் எப்பிடி அனுப்புவன். சிறையில நடக்கிறது உங்களுக்கு தெரியாது. என்ர பிள்ளையளா நினைச்சு சொல்லுறன். நீங்க இருக்கிற இடம்தான் உங்களுக்கு பாதுகாப்பு. வெளிநாட்டுக்காறரோ,மனித உரிமைக்காறரோ வந்து போற இடம். உங்கட கஸ்டங்களப் பாக்காம, பொறுமையா இருங்கோ. விட்டிருவாங்கள்.”

அவர்கள் எதுவும் பேசவில்லை.

“நான், நீங்கள் மன்னிப்பு கேட்டதாலதான் விடுறதாக எழுதிறன்” - என்றபடி எதையோ எழுதியவர் -

“பொறுமையா எல்லாத்தையும் சகிச்சுக்கொண்டு போங்கோ. புனர்வாழ்வுமுகாம்தான் பாதுகாப்பு. பாதுகாப்பாயிருங்கோ. மானம்தானே முக்கியம். இது மொழிதெரியாததால வந்த பிரச்சனை. அவ்வளவுதான்” என்றார்.

திரும்பவும் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தார். பெண் பொலிஸார் அவர்களை அன்றிரவு தம்முடன் வைத்திருந்துவிட்டு, காலையில் முகாமுக்குக்கொண்டு சென்றனர்.

இதுவரை முகாமில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் இயற்கைக்கடன் கழிக்கக்கூட திறந்து விடப்படவில்லை. பொலிஸின் அறிக்கை வந்தபிறகு, அவர்களை தங்கள் “பி”புளொக்கிற்கு செல்ல அனுமதிதத்தனர்.

இந்த சம்பவத்திற்குப்பிறகு,“பி” புளொக் தனிக்கவனம் பெற்றதுடன் ஆமிப் பெண்களின் வெறுப்புக்கும் உள்ளானது.

வைத்தியசாலைக்கு போகவேண்டிய நோயாளர்கள் எல்லோருமே உடனே கொண்டு செல்லப்படுவதில்லை. நோய் முற்றி, இனி இறந்து விடுவாள் என்ற நிலை வந்தால் மட்டுமே,எட்டு கிலோமீட்டருக்குள் இருந்த வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

“பி” புளொக்கிற்கே ஒரு வைத்தியர் வந்துபோய்க்கொண்டிருந்தார். அவரை சந்தேகப்பட்டு நிறுத்திவிட்டனர். இயக்கத்திலிருந்த ஒரு பெண் வைத்தியர் “டீ” புளொக்கில் இருந்தாலும்,அவர் சிலருக்கு சிகிச்சையளிக்க அனுமதித்தாலும், போதிய மருந்துகளோ அல்லது மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்படி சிபாரிசு செய்யவோ அனுமதிக்கப்படவில்லை.

“ஏ” புளொக்கிலிருந்து இரு பெண்கள் தினமும் “பி” புளொக்கிற்கு வந்து மருந்து கொடுப்பார்கள். அவர்கள் வைத்தியர்கள் அல்ல. வைத்தியசாலையில் வேலை செய்த அனுபவம் இருந்தது.அதைக் கொண்டு “சேலைன்” ஏற்றவும் ஆஸ்த்துமா நோயாளர்களுக்கு காஸ் பிடிக்கவும் செய்தார்கள்.

பாரிய இழப்புகளுக்கும், மன உளைச்சல்களுக்கும் ஆளாகிய நிலையில், அங்கு வந்திருந்த பெண்கள், பலதரப்பட்ட மனக்குழப்பங்களை அனுபவித்தபடியிருந்தனர்.



சுபானந்திக்கு இரண்டு மாதமாக-யும் காய்ச்சல் விடவேயில்லை. அவள் வாரந்தோறும் வைத்தியசாலைக்கு போனாள். மாலினியும் அவ்வாறே பாதிக்கப்பட்டிருந்தாள். பார்வதிக்கு திடீர் திடீரென்று வயிற்றோட்டம் வந்து தொல்லை கொடுத்தது. உமா கால்கள் இருந்தாலும் எழுந்து நடக்க முடியாமலிருந்தாள். சாந்தாவின் உடலில் பென்னம் பெரிய தழும்புகள் இருந்தன.

இவையெல்லாவற்றையும் விட, ரோசாவுக்கு ஒரு மோசமான நோய் ஏற்பட்டது. மாலையில் நன்றாகத்தான் இருந்தாள். எப்பவும் தன் பிள்ளையை நினைத்துப் புலம்பிக் கொண்டேயிருப்பாள். அவள் காதலித்து ஒரு - போராளியல்லாத - பொதுமகனைக் கலியாணம் செய்திருந்தாள். ஒரு பெண் குழந்தையிருந்தது. ஆனால், அவளது மாமியாருக்கு அதில் விருப்பமில்லை. இப்போது இவள் முகாமில் இருப்பதை சாக்காக வைத்து, தன் மகனையும் பேத்தியையும் இந்தியாவுக்கு கூட்டிச்சென்றுவிட்டாள். அவளுடைய ஊரிலிருந்து அவளைப் பார்க்க வந்த தந்தைதான் இதைச் சொன்னார்.அவள் மனமுடைந்து போனாள். அதை வெளிக்காட்டாமலே மற்றவர்களுடன் சிரித்துப் பேசித்திரிந்தாள்.

இரவு லேசாகத்தான் தலைவலிக்கிறது என்றாள். பின் பக்கத்தில் கிடந்தவளின் கையைச் சுரண்டி,“ரேகா...ரேகா...” என அருட்டினாள்.

“என்னக்கா”

“எனக்கு மெஞ்சஸ் வந்திட்டுது ‘பாட்’ இருந்தா தாவன்,என்னட்ட முடிஞ்சிது”

“என்னக்கா இப்ப கொஞ்சநாள் முதல்தானே நீங்க மெஞ்சஸ் எண்டீங்க” “ச்சா... வந்திட்டுது அதுக்கென்ன செய்யிறது”

ரேகா தனது பையைத்துளாவி, இரு ‘ஸ்ரேபிறீ’ பாட்களை எடுத்துக் கொடுத்தாள். இரவு பத்துமணி கடந்தபோது ரேகாவை மறுபடி அழுத்தினாள்.

“என்னக்கா..”

“பாட் முழுக்க நனைஞ்சிட்டுது,வேற இருக்கா..”அவள் எடுத்துக்கொடுத்தாள். மீண்டும் சற்று நேரத்தில் -“ரேகா... இந்த பெட் சீட்டை எடுத்துக்கிழி,பெரிசா ஒரு துண்டு தா..” - என்றாள்.

“அக்கா,என்னக்கா செய்யுது” - என்ற ரேகா பயத்தில்,அருகில் படுத்திருந்த அனுவை எழுப்பினாள். இப்போது ரோசாவுக்கு களைப்பாக இருந்தது.

“எனக்கு தண்ணி வேணும்” - என்றாள். அவளுடைய சுவாசம் வேகமாக வந்து கொண்டிருந்தது.

“என்ன... என்ன...” - என்ற கேள்விகளோடு பெண்கள் கூடத் தொடங்கினார்கள்.“என்னவாம் ...” - என்ற கேள்வியோடு எழுந்த அனு கூச்சலிட்டாள்.“நிமலா....நிமலா....” - என்று கத்தினாள்.

அவள்மட்டும்தான் அந்த புளொக்கின் சார்பில் அலுவலகத்தில் பேச அனுமதிக்கப்பட்டவள். தூக்கக் கலக்கத்துடன் எழுந்து வந்தவள் - “என்னவாம் ஆர் கூப்பிட்டது ...” என்றவாறே வந்தாள். “வாரும் கெதியா... ரோசா ரோசாவுக்கு ஏதோ செய்யுது”

அவள் வந்து “அதுக்கு என்ன செய்யிறது, இந்த நேரம் ஓவீசில யாரும் இருக்கமாட்டினம். பாப்பம் விடியட்டும்”- என்று சொல்லிவிட்டு திரும்பவும் தன் தூக்கத்தைத் தொடரச் சென்றாள்.

ரோசாவின் பாட்களை மீறி பெட்சீட்டில் குளமாகிய குருதி, பெட்சீட்டிலிருந்து நிலத்தை நனைக்கத் தொடங்கியிருந்தது. எல்லோருமே உறங்கிவிட்டிருக்க அவளுடைய உணர்வுகள் அவளிடமிருந்து விடைபெறத் தொடங்கியிருந்தன.

நன்கு விடியுமுன்பே அவளைத் தட்டிப்பார்க்க கையை நீட்டியபோது ரேகாவின் கையில் பிசுபிசுப்பாக உறைந்து கொண்டிருந்த குருதி ஒட்டியது.

“அக்கா... அக்கா...” என்று அழைத்தபோது வெறும் முனகலே ரோசாவிடம் இருந்தது. அவள் ரத்தவெள்ளத்தில் கிடந்த கோலம் அவளையறியாமலே அவளைக் கூச்சலிட வைத்தது.

“அய்யோ! அக்கா.... அக்கோய்....” - என அவள் போட்ட சத்தம்,முழு மண்டபத்தையுமே கலக்கியது.

நிமலா ஓடிவந்தாள். வாரிச் சுருட்டிக் கொண்டு வெளியே ஓடினாள். வெளியே வாசல் காவலில் நின்ற காவலாளிப் பெண்ணிடம் கத்தினாள. அவள் அலுவலகத்தை நோக்கி ஓடினாள்.

ஒரு அம்புலனஸ் வாகனம் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். சாரதி மட்டும் தன் முகாமுக்குப் போய்விடுவான். போராளியை வெளியே கொண்டு செல்வதாயின் பொலிசாரே கொண்டு செல்வர். இரு பெண்பொலிசாரும் புறப்பட்டனர். அவர்களது சீருடையில் அவர்கள் வெளியே வர, நன்கு விடிந்து விட்டது.

Own an Ultra *Luxury* Apartment in Colombo, brought to you by an Australian Consortium.







3 BR Starts from LKR 58 m

2 BR Starts from LKR 33.5 m

The Lux Melba *Luxury Residences*

A unique opportunity to invest in a boutique development of only 19 ultra luxury residences, in a complex that is set to become the epitome of elegance and luxury in Wellawatte.The area boasts amenities such as sought after schools, restaurants, banks, hospitals, retail & religious centres, public transport& and best of all, minutes stroll to the Indian Ocean.

TO ENQUIRE PLEASE CALL OR EMAIL US:
Tel: +61 413 688 781 or +61 404 029 849
Email : theluxmelba@hotmail.com

www.luxmelba.com

35-36 IBC Road
Wellawatte, Colombo 06

CEYLON EXPRESS


MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

# மாத ராசிபலன்



## மேடம்

அனைவருக்காகவும் பாடுபடும் குணமுடைய மேஷ ராசிக்காரர்களே, இந்த மாதம் பணவரத்து இருக்கும். எடுத்த முடிவை செயல்படுத்தும் முன் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசிப்பது நல்லது. எந்த ஒரு காரியத்திலும் அவசர முடிவு எடுக்க தூண்டும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. வேலையாட்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.

## கடகம்

எதிலும் சிந்தித்தும் யோசித்தும் செயல்படும் கடக ராசிக்காரர்களே, நீங்கள் புதுமை படைக்க எண்ணுபவர்கள். இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சனைகள் தீரும். பல வகையான யோகங்கள் ஏற்படும். உடல் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். மன குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் குவியும். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும்.

## துலாம்

எவரையும் தமது திறமையால் தம்பால் இழுத்துக் கொள்ளும் வசீகர சக்தி படைத்த துலா ராசியினரே, இந்த மாதம் எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். தடைபட்டு வந்த காரியங்களில் தடை நீங்கும். சாமர்த்தியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகி செல்வார்கள். இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும்.

## மகரம்

தோல்விகளை வெற்றியின் படிகளாக கருதி எதை பற்றியும் கவலைப்படாமல் செயல்படும் மன உறுதி கொண்ட மகர ராசிக்காரர்களே, இந்த மாதம் பணவரத்து கூடும். வாக்கு வன்மையால் லாபம் உண்டாகும். வீண் பயணங்களும் அலைச்சலும் உண்டாகும். இடமாற்றம் ஏற்படலாம். கெட்ட கனவுகள் தோன்றும். உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும். நேரம் தவறி உண்பதை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வீண் அலைச்சலும் பயணங்களும் ஏற்படலாம்.

## இடபம்

பிறருடைய தவறுகளை எளிதில் மன்னிக்கும் குணமுடைய ரிஷப ராசிக்காரர்களே இந்த மாதம் திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரத்து தாமதப்பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி சென்று விடுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் அடையும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும்.

## சிம்மம்

எடுத்த முடிவை மாற்றிக் கொள்ளாத குணமுடைய சிம்மராசியினரே, இந்த மாதம் சின்ன விஷயத்துக் கூட கோபம் வரலாம். நிதானமாக இருப்பது நன்மை தரும். புத்தி சாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். வீண் அலைச்சல் ஏற்படும். நீங்கள் நினைப்பது படி மற்றவர்கள் நடந்து கொள்ளாததால் மன அழுத்தம் ஏற்படலாம்.

அடுத்தவர் யாரும் குறைகூறக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பீர்கள். எதிலும் லாபம் கிடைக்கும். காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும்.

## விருச்சிகம்

முன்கோபத்தை குறைத்து செயல்படுவதன் மூலம் அதிர்ஷ்ட பாதையில் முன்னேற்றங்கள் பல காணும் விருச்சிக ராசிக்காரர்களே, இந்த மாதம் வாழ்க்கை தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கை கூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை மாறும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும்.

## கும்பம்

அனைத்து விதத்திலும் ஆதரவற்றவர்களை ஆதரிக்கும் குணமுடைய கும்ப ராசிக்காரர்களே, இந்த மாதம் பொன், பொருள் சேரும். வாகன யோகம் உண்டாகும். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்புகள் கிடைக்கும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். அடுத்தவர் யாரும் குறை கூறக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பீர்கள். எதிலும் லாபம் கிடைக்கும். காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். எதிலும் லாபம் கிடைக்கும்.

## மிதுனம்

எந்தஒருபெரியபிரச்சினையையும் கவனமாக கையாண்டு சிறியதாக மாற்றி அதில் வெற்றி காணும் மிதுன ராசிக்காரர்களே, இந்த மாதம் எதிர்பார்த்த சில தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். வீடு ,வாகனம் ஆகியவற்றில் இருந்து வந்த இழுபறி நீங்கும். திறமையை அதிகப்படும். உடல் நலம் சீரடையும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும்.

## கன்னி

எந்த விஷயத்தையும் தள்ளிப் போடாமல் உடனே முடிவு காண துடிக்கும் குணமுடைய கன்னி ராசிக்காரர்ளே, இந்த மாதம் தெளிவான சிந்தனை தோன்றும். எந்த காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். கலைத் துறையினருக்கு தகுந்த மரியாதையும் மதிப்பும் கிடைக்கும். விருதுகள் கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த இழுபறியான வேலைகள் முடிவுக்கு வந்து சேரும்.

## தனுசு

தெய்வத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுபட்டு அனைத்து வேலைகளிலும் செயல்பட்டு வெற்றிகளைக் குவிக்கும் தனுசு ராசியினரே, இந்த மாதம் எடுத்த முயற்சிகள் கை கூடும். வரவுக்கேற்ற செலவு ஏற்படும். எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் உண்டாகும். மனோ தைரியம் கூடும். செய்யாத தவறுக்கு மற்றவர்களால் குற்றம் சாட்டப்படலாம். எனவே கவனம் தேவை. கண்நோய், பித்தம், வாதம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு நீங்கும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு இருக்கும்.

## மீனம்

தம்மை போலவே மற்றவர்களும் காலத்தை வீணாக்காமல் நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணும் மீன ராசியினரே, இந்த மாதம் பல வழியிலும் பணவரத்து இருக்கும். காரியத் தடைகள் நீங்கும். மற்றவர்களின் மீது இரக்கம் ஏற்பட்டு உதவிகள் செய்வீர்கள். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பெரியோர்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் கிடைக்கும். அலட்சிய போக்கை கைவிடுவது நல்லது.


• 1 x Dahua 4 Channel Network Recorder
• 4 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 1TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1350 INSTALLED
Standard Package
3 years Warranty on all products and labour. All work carried out under insurance and performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 6 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 2TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1750 INSTALLED
Super Package
3 years Warranty on all products and labour. All work carried out under insurance and performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 8 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 3TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$2550 INSTALLED
Ultra Package
3 years Warranty on all products and labour. All work carried out under insurance and performed by licensed technicians.
Other Services
IP/HD CCTV Systems | Security Alarm | Alarm Monitoring | Access Control | Security Fog System
Data & Tele-communication | Video Intercom | Smart Home | Solar CCTV /Ducted Vacuum | Digital TV Antena
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
UTECH SECURITY Corporate Group
We are registered and licensed by Victoria Police. Private security Business License: 910-932-10S
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174


Transco CARGO
THIS YEAR
CHRISTMAS WILL BE
DIFFERENT
MONTH | FINAL CUT OFF DATE | EST ARRIVAL IN SL
August | 2020-08-01 | 2020-09-08
August | 2020-08-08 | 2020-09-15 *
August | 2020-08-15 | 2020-09-22
August | 2020-08-22 | 2020-09-29 *
August | 2020-08-29 | 2020-10-06 *
September | 2020-09-05 | 2020-10-13
September | 2020-09-12 | 2020-10-20 *
September | 2020-09-19 | 2020-10-27
September | 2020-09-26 | 2020-11-03 *
October | 2020-10-03 | 2020-11-10
October | 2020-10-10 | 2020-11-17 *
October | 2020-10-17 | 2020-11-24
October | 2020-10-24 | 2020-12-01 *
October | 2020-10-31 | 2020-12-08
November | 2020-11-07 | 2020-12-15
November | 2020-11-14 | 2020-12-22 *
November | 2020-11-21 | 2020-12-29
November | 2020-11-28 | 2021-01-06 *
December | 2020-12-05 | 2021-01-13
December | 2020-12-12 | 2021-01-20 *
December | 2020-12-19 | 2021-01-27
2020 CHRISTMAS
SHIPPING SCHEDULE
* Only at Campbellfield & Dandenong South Transco Offices
HOPEFULLY IN A POSITIVE WAY
NEW AND IMPROVED
NEW SERVICE
Shop online in Australia
FROM SRI LANKA
Transco Shopping
transcoshopping.lk
45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255
follow us on
We love to deliver
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167